விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 தை 16 புதன்கிழமை (30.01.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 042

SATS TECH
யாழ். நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

# மன்னாரில் கிளைமோர்த் தாக்குதல்

# 11 மாணவர்கள் உட்பட 17 பேர் பலி

## மேலும் 17 பேர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் தட்சணாமருதமடுப் பகுதியில் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் கிளைமோர்த் தாக்குதலில் சிக்கியதில் 11 பாடசாலை மாணவர்கள், ஆசிரியர் ஒருவர் உட்பட 17 பேர் பலியாகியுள்ளதுடன் மேலும் 9 மாணவர்களும் பொதுமக்களுமாக 17 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இந்த கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)



## ஆழ்ந்த சோகத்தில் மடுக் கோவில் பகுதி

(மன்னார்)

மன்னார் தட்சணாமருதமடுப் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் காயமடைந்தவர்களும் கொல்லப்பட்டவர்களும், அதிகமாக மடுக்கோவில் பகுதியில் வசிப்பவர்கள் என்பதனால் மடுக் கோவில் பகுதி ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இத் தாக்குதலையடுத்து தாக்குதல் இடம் பெற்ற பகுதிகளைச் சுற்றி இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சின்னப்பண்டிவிரிச்சான் அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் ஆசிரியரும் மாணவர்களும் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிக்கும் பள்ளமடு வைத்தியசாலை சோகமயமாக காட்சியளிப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களின் உற்றார், (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.விமான சேவை வழமைக்குத் திரும்பியது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான சிவில் விமான சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. பலாலி விமான நிலையத்தை நோக்கி நேற்று முன்தினம் காலை புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலையடுத்து இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பலாலி விமான நிலையத்திற்கான பயணிகள் விமான சேவை இடைநிறுத்தப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக நேற்று முன்தினம் எந்தவொரு சிவில் விமானமும் பலாலிக்குச் செல்லவில்லை. இதனால் அங்கிருந்து இரத்மலானைக்கும் சிவில் விமான சேவை இடம்பெற (10 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் மட்டக் குழுவின் பலாலி விஜயத்தை புலிகள் முன்னரே அறிந்திருந்தனரா?

### பல கோணங்களில் விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

பலாலி விமானப் படைத் தளத்திற்குப் பாதுகாப்பு உயர் மட்டக் குழுவினர் விஜயம் செய்வது தொடர்பான தகவல்களைப் புலிகள் ஏற்கனவே அறிந்து வைத்திருந்தனரா? என்பது குறித்து விசாரணைகளை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சு பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

கொழும்பிலிருந்து விமானம் மூலமாகச் சென்ற பாதுகாப்பு உயர் அதிகாரிகள் சென்ற விமானம் தரையிறங்குவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் புலிகள் பலாலி விமான நிலையத்தை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டமை குறித்தே விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இராணுவ இயந்திரத் தாக்குதல் அணியின் பிரியாவிடை வைபவத்தில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் பங்குபற்ற இருந்தமை தொடர்பாக முன்கூட்டியே அறிவிக்கப்படாத நிலையில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் அங்கு விஜயம் செய்வது குறித்த தகவல்களைப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சரவை உபகுழு

### அமைச்சர் டக்ளஸ் தகவல்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக அமைச்சரவை உப குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் ஆலோசனைப்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இன்னும் மூன்று வாரங்களில் அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வகட்சி ஆலோசனைக் குழு சமர்ப்பித்த இடைக்கால அறிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவதை சட்ட ரீதியாகத்தான் சந்திக்க வேண்டும்

### கலைஞர் கருணாநிதி விளக்கம்

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து பேசப்படுகின்ற பேச்சுக்களை சட்ட ரீதியாகத்தான் சந்திக்க வேண்டும் என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.

அந்த வகையில் திருமாவளவனைக் கைது செய்ய சட்டத்தில் இடம் இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். அப்படி சட்டத்தில் இடம் இருந்தால் அதனை செய்ய அரசு தயாராகவுள்ளது என்றும் முதல்வர் தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரச்சினை தொடர்பாக சட்ட மன்றத்தில் நேற்று நடைபெற்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்குப் பதிலளித்து (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கருணாவை தடுத்து வைத்திருப்பது மனித உரிமையை மீறும் செயல்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கருணாவை அவரது குடும்பத்துடன் இணையவிடாது பிரித்தானியா தடுப்பது மனித உரிமை மீறலாகும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தனது மனைவியும், பிள்ளைகளும் பிரித்தானியாவில் வசிப்பதனால் பிரித்தானியாவுக்கு செல்வதற்கு தனக்கு உதவி புரியுமாறு கருணா என்னைக் கேட்டிருந்தார். நான் அவரை அங்கு அனுப்புவதற்கு மூன்றாவது நட்பு நாடு ஒன்றின் ஊடாக முயற்சி செய்திருந்தேன். ஆனால் அது கைகூடவில்லை.

இதன் பின்னர் அவருக்கு உதவும் முயற்சியை நான் கைவிட்டு விட்டேன். இது நீண்ட காலத்திற்கு முன்னர் நடைபெற்றது.

கருணாவை இலங்கைக்கு வெளியே அனுப்பும் தேவை எமக்கு கிடையாது. ஏனெனில் அவர் எமக்கு பயனுள்ளவர். அவர் எவ்வாறு கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டார் என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் எனது மனதில் எழும் கேள்வி என்னவெனில், அவர் எவ்வாறு பிரித்தானியாவுக்கான விசாவை பெற்றுக்கொண்டார் என்பது தான்.

பிரித்தானியாவுக்கான விசாவை பெற்றுக் கொள்வது அவ்வளவு இலகுவானது அல்ல. அங்கு பாதுகாப்புக்கள் பலமானவை. கருணாவை அவரது குடும்பத்துடன் இணையவிடாது பிரித்தானிய அரசு தடுப்பது மனித உரிமை மீறலாகும் என்றார் அவர்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே தனக்கு போலியான கடவுச்சீட்டை வழங்கியதாக கருணா கடந்த வாரம் பிரித்தானியாவின் நீதிமன்ற விசாரணையின்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இதனிடையே கோத்தபாய ராஜபக்ஷ வின் குற்றச்சாட்டுக்களுக்கு கருத்துக் கூறுவதனை இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகத்தின் பேச்சாளர் தவிர்த்துக் கொண்டுள்ளதுடன் கருணா போலியான கடவுச்சீட்டுடன் எவ்வாறு பிரித்தானியாவுக்குள் நுழைந்தார் என்பது தொடர்பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (ச-5)

## வஸ்கமுவ சரணாலயத்தில் இருவரின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

வட மத்திய மாகாணத்தின் பொலநறுவ மாவட்டத்திலுள்ள வஸ்கமுவ தேசிய பூங்காப் பகுதியில் நேற்று முற்பகல் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

வஸ்கமுவ தேசியப் பூங்காவின பங்களாவில் பணிபுரியும் இருவரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் இரவு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, இது குறித்து வஸ்கமுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிறப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பொலநறுவ மாவட்டத்தின் தனமல்வில மற்றும் புத்தல பகுதிகளில் அண்மையில் தாக்குதலை நடத்தியவர்களின் கைவரிசையாகவே இச்சம்பவமும் இருக்கலாம் என்று படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

## கிளிநொச்சி வைத்தியசாலையின் 4 பணியாளர்கள் வவுனியாவில் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மருத்துவமனைக்கு ஒட்சிசன் பெறச் சென்ற நால்வர் வவுனியாவில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நால்வரில் இருவர் சுகாதார அமைச்சின் பணியாளர்கள் எனவும் ஏனைய இருவரில் ஒருவர் வாகன ஓட்டுநர் எனவும் மற்றையவர் உதவியாளர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பயணித்த வாகனத்தில் வெடி பொருட்கள் காணப்பட்டதாகக் கூறியே நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸாரால் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் கிளிநொச்சி மருத்துவமனைக்குச் சொந்தமான லொறி ஒன்றில் சி-4 ரக வெடி பொருட்களை கடத்திய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில் இருவர் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

லொறியின் ஜெக் உபகரணத்திலும் அதில் பயணம் செய்தவர்களின் சப்பாத்துக்களிலும் வெடி பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டு பிடித்தனர்.

வவுனியாவிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் குறிப்பிட்ட லொறியை பொலிஸார் சோதனையிட்ட போதே அதில் பயணம் செய்த நால்வரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தமது சப்பாத்துக்களுக்குள் சூட்சமான முறையில் மறைத்து வைத்திருந்த சீ-4 ரக வெடிமருந்தின் எடை சுமார் ஒரு கிலோ எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து காஸ்சிலிண்டரை ஏற்றிக் கொண்டு வவுனியா நோக்கிச் சென்ற போதே இந்த லொறி சோதனையிடப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-2,5)

## ஆசியாவில் விவசாய வளர்ச்சிவீதம் குறைந்த நாடாக இலங்கை

### உலக வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசியப் பிராந்திய நாடுகளில் விவசாயத்துறை வளர்ச்சி வீதம் குறைவான நாடாக இலங்கை உள்ளதாக உலக அபிவிருத்தி அறிக்கை 2008ன் இணை ஆசிரியர் டெறிக் பைர்லி தெரிவித்தார்.

உலக விவசாய அபிவிருத்தி அறிக்கை தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுப் பிற்பகல் கொழும்பில் உள்ள உலக வங்கி தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய உலக வங்கியின் உலக அபிவிருத்தி அறிக்கையின் இணை ஆசிரியர் மேலும் கூறியதாவது,

1993 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதில் ஆசியப் பிராந்தியத்தின் விவசாய வளர்ச்சி 2.9 வீதமாகக் காணப்படுகின்றது. இதே காலப் பகுதியில் இலங்கையின் விவசாய வளர்ச்சி 1.2 வீதமாக உள்ளது.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நாடுகள் தமது வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் 4 வீதத்தை மாத்திரமே விவசாயத்திற்கு ஒதுக்குகின்றனர்.

எனினும் இலங்கை தனது வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 5 வீதத்தை விவசாயத்திற்காக ஒதுக்கியுள்ளது. இலங்கையின் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு உலக வங்கி மூன்று படிமுறைகளை பரிந்துரை செய்துள்ளது.

நெல், தேயிலை, தெங்கு, இறப்பர் போன்ற பாரம்பரியப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்; உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுத்தல்; விவசாயத்துறையுடன் தொடர்புடைய ஏனைய துறைகளை அபிவிருத்தி செய்தல் என்பவையே உலக வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பரிந்துரைகளாகும்.

விவசாய வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதன் மூலம் வறுமை ஒழிப்பை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். ஏனெனில் உலகில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களில் 70 [illegible]மானோர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர்.

கிராமங்களில் வாழும் மக்கள் பொதுவாக விவசாயத்துறையிலேயே தங்கியுள்ளனர். எனவே விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதன் மூலமே இம் மக்களின் வறுமையைப் போக்க முடியும் என்றார். (ச-5)

## மட்டு.-யாழ்.கல்வியியற் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரமும் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனால் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் 01.02.2008 அன்று தம்மை பதிவு செய்து கொள்ளுமாறும் அவர்களுக்கான கடிதங்களை இன்று முதல் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**ஆங்கிலப் பாடநெறி**

இளங்கோ கௌரீசன் (கரணவாய் தெற்கு); ஞானயோகன் தர்ஷியா (மட்டுவில் வடக்கு); அந்தோனிப்பிள்ளை அந்தோனி யசிக்கா (தும்பளை மேற்கு); ஷறோன் அன்சிலா சேவியர் அருமைநாயகம் (பண்டத்தரிப்பு); செல்லத்துரை அர்ஜனா (உடுவில்); ரஜீவ் பொன்னம்பலநாதன் (நெல்லியடி வடக்கு); ஏ. கோகுலகிருஷ்ணன் (உடுவில்); சிறீதரன் உமையாள் (அளவெட்டி வடக்கு);

சிவசிதம்பரலிங்கம் ஞானப்பிரியா (உரும்பிராய் கிழக்கு); செல்வராசா யூடித் பபினா (இளவாலை); அந்தோனி சோபிகா (நீராவியடி); சிவானுஜா சிவநாதன் (சுங்குவேலி தெற்கு); கிரன்னு நடேசபத்தர் உதயன் (சுன்னாகம்); தவராசா சோபிகா (நவாலி கிழக்கு); தவத்துரை வசந்தரூபி (கோண்டாவில் வடக்கு); செல்வராசா திசாளினி (மீசாலை கிழக்கு);

நகுலேஸ்வரன் கௌரீஸ்வரி (மானிப்பாய்); வல்லிபுரம் உசாளினி (கம்பர்மலை வல்வெட்டித்துறை); குலசிங்கம் கஜேந்தினி (அல்வாய் வடக்கு); கங்காதரன் வித்தியா (புலோலி தெற்கு ); சிவகுமாரன் சிந்திக்கா (தும்பளை );

மரியா அனற் தனுசா வாசஸ்லாஸ் (பண்டத்தரிப்பு); துரைசிங்கம் சயந்தினி (கல்வியங்காடு); புஸ்பராசா துவாரகா (கோண்டாவில் கிழக்கு); மோகன்ராஜ் பவித்திரா (திருநெல்வேலி கிழக்கு);

நாகேந்தின் கிருஷிகா (மீசாலை வடக்கு); வித்தியா நாகராசா (கொக்குவில் கிழக்கு); சிவஞானசேகரம் சந்திரமதி (நவாலி தெற்கு);

சுரேகா சேதுகாராளர் (சாவகச்சேரி); காயத்திரி கந்தசாமி (அளவெட்டி வடக்கு);

**மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி**

**முதல்மொழி (தமிழ்)**

பி.வாசுகி (உடுவில் மானிப்பாய்); கோகிலவாணி இரத்தினசபாபதி (பருத்தித்துறை); எம்.பாலதாசன் (மட்டுவில் தெற்கு); கே.கௌசிகன் (புலோலி தெற்கு); ஆர்.ரஞ்சிதா (மட்டுவில் தெற்கு).

**தொழில்நுட்பக் கல்வி (தமிழ்) (வடிவமைப்பும் தொழில் நுட்பமும்)**

எஸ்.கிரிசாந்தன் (அளவாவோடை சுன்னாகம் ); ஜே.டிவோன் (மல்லாகம்); ஏ.நிக்கஸ் (மல்லாகம்); எம்.தர்மா றொமிசன் (நெடுந்தீவு மத்தி);

**சமூக விஞ்ஞானம் (தமிழ்)**

பி.ராஜிதா (புலோலி தெற்கு); அமிர்தினி (வவுனியா); எஸ்.பிரியதர்சினி (உடுவில் தெற்கு); ரி.தர்மதா (அளவெட்டி);

**கணிதம் (தமிழ்)**

ரி.ரதிகரன் (இளவாலை); ரி.சுகிர்தா (உடுவில் சுன்னாகம்). (ச-6)



காரைநகர் பழைய கண்டிமதகு நீண்டகாலமாக உடைந்து வீழ்ந்துள்ளது. பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிற்கு தகவல் வழங்கியும் இன்றுவரை புனரமைக்கப்படவில்லை எனவும் இதனால் நாளுக்குநாள் விபத்துக்கள் அதிகரித்து வருவதுடன் வாகனங்களும் சேதமடைந்து வருவதாகவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சேதமடைந்த பழைய கண்டிமதகினையும் அதனூடாக பகீரத பிரயத்தனத்தின் மத்தியில் பயணிகள் மினிபஸ் ஒன்று நகருவதனையும் படத்தில் காணலாம். *(படம்: காரை நிருபர்)*

## சமையல் எரிவாயுவின் விலை 3000 ரூபாயாக நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு விற்பனைசெய்யப்படும் 12.5 கிலோ எடையுடைய எரிவாயுவை (காஸ்) 3 ஆயிரம் ரூபாயிற்கு விற்பனை செய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்த விலையிலேயே எரிவாயுவினை விற்பனை செய்ய வேண்டும் என யாழ். மாவட்டத்தில் இதனை விற்பனை செய்யும் சகல விற்பனையாளர்களும் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

குறித்த விலையில் இது விற்பனை செய்வதை உறுதிப்படுத்துவது எரிவாயுவினைக் கொண்டுவரும் முகவர்களின் பொறுப்பாகும் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)


SRI LANKA RED CROSS SOCIETY

## இலங்கை செஞ்சிலுவை சங்கம், யாழ்.கிளை

## ஆங்கிலக் கற்கை நெறி -II

**இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்.கிளை 2007-ல் நடாத்திய ஆங்கில கற்கை நெறி -I யினைத் தொடர்ந்து 2008-ல் ஆங்கிலக் கற்கை நெறி -II (உயர் கல்வி)யினை 07.02.2008 தொடக்கம் நடத்தவுள்ளது. இந்நெறியினை கற்க விரும்பும் மாணவர்கள் 05.02.2008க்கு முன்னதாக தமது சுயவிபரக்கோவை அடங்கிய விண்ணப்பங்களை தமது இ.செ.ச.பிரிவின் தலைவர்/செயலாளர் சிபாரிசுடன் கீழ்க் காணும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும், இக்கற்கை நெறி 07.02.2008 மு.ப 09.00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் ஆரம்பிக்கப்படும்.**

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவை சங்கம், யாழ்.கிளை,**
**73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-748)

# வெளியிடங்களிற்கான தபால் பொதி சேவை வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பம்

## யாழ்.பிரதித் தபால்மா அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகத்திலிருந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் வெளியிடங்களிற்கான தபால்பொதி சேவை ஆரம்பமாகவுள்ளதாக யாழ். பிராந்திய பிரதித் தபால்மா அதிபர் எம். குமரகுரு தெரிவித்தார்.

ஏ-9 பாதை மூடப்பட்டதைத்தொடர்ந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்த வெளியிடங்களிற்கான தபால் பொதிசேவை மீண்டும் நாளை மறுதினம் முதல் ஆரம்பமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இத் தபால் பொதி சேவை முதலில் யாழ்ப்பாணம் அஞ்சல்அலுவலகத்திலே ஆரம்பிக்கப்படு மெனவும் பின்னர் ஏனைய பகுதிகளிற்கு விஸ்தரிக்கப்படுமெனவும பிரதித்தபால்மா அதிபர் எம். குமரகுரு தெரிவித்தார்.

அத்துடன் பொதிகள் அனுப்பவுள்ளோர் தமது பொருட்களை யாழ்ப்பாணம் தபாலகத்தில் கொண்டுவந்து தபாலக உத்தியோகத்தர்களினால பரிசோதிக்கப்பட்ட பின்னரே பொதிசெய்யப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார்.

மேலும் இலத்திரணியல் உபகரணங்கள், வீடியோ ஒளிநாடாக்கள், சி.டி, புளோப்பி போன்றவையும் தபால் பொதியில் அனுப்ப தபாலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதெனவும் யாழ்.பிரதித்தபால் மா அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை தபால் பொதிகள் செய்வதற்காக தபால்பொதி பெட்டி (POST PACK) ,தபால் பொதி உறை என்பன யாழ்ப்பாண அஞ்சல் கடையில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் பிரதித்தபால்மா அதிபர் எம்.குமரகுரு தெரிவித்தார். (5)

## கல்வியியல் முதுகலைமாணி தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கல்வியியல் முதுகலை மாணிக்கு புதிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சை பெப்ரவரி 16ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என பட்டப்பின் கற்கை நெறிப் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்தார்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-10)

# விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய இலக்கம்

(யாழ்ப்பாணம்)

விதவை அநாதை ஓய்வூதிய இலக்கத்தினை பெறுவதற்கு ஓய்வூதிய திணைக்களத்திற்கு விண்ணப்பித்து இது வரை இலக்கம் கிடைக்கப் பெறாத அரச அலுவலர்கள் தமது விபரங்களை திணைக்களத் தலைவர் ஊடாக தமக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

முழுப்பெயர், பதவி, தேசிய அடையாள அட்டை இலக்கம், முதல்நியமனத்திகதி, விதவை அநாதை ஓய்வூதியம் பெறவிண்ணப் பித்த திகதி, திணைக்களம் முதலியவற்றை உள்ளடக்கியதான விபரங்களை பிராந்திய ஆணையாளர் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 15.2.2008 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை விதவை அநாதை ஓய்வூதிய இலக்கத்திற்கு விண்ணப்பம் செய்யாதவர்களும் தமது விபரங்களை அனுப்பி வைக்குமாறு விதவை அநாதை ஓய்வூதிய இலக்கத்தினை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஓய்வூதிய திணைக்களம் மேற் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான திட்டங்களை வங்கிகள் நடைமுறைப்படுத்த வேண்டும்

## பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

மக்களின் வாழ்வாதாரத்தை முன் னேற்றுவதற்கான செயற்றிட்டங்களையே வங்கிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

சுன்னாகம் இலங்கை வங்கி கிளையில் கணனி வலைப்பின்னல் இணைத்துக் கொள்ளும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிளை முகாமையாளர் அரசகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேலும் தெரிவிக்கையில்,

மேலை நாடுகளில் எல்லோரும் வங்கிக் கணக்கு வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கில் குழந்தைகள் பிறந்தவுடன் அரசாங்கம் குறிப்பிட்ட தொகை பணத்தை வங்கியில் போட்டுக் கணக்கை ஆரம்பித்துவைக்கிறது. பின்னர் அந்த வங்கிக் கணக்கில் பிள்ளைகளுக்கான நிதி வந்து சேருகின்றது.

குறிப்பாக இந்திய மகளிர்களின் முன்னேற்றத்திற்காக எங்கும் மகளிருக்கான கணக்குகளை நுண்கருத் திட்டத்திற்கு அமைய நிதியை வழங்கி, பெண்களை சுயதொழில் மூலம் வருமானம் பெற வசதிசெய்து வருகிறது.




வங்கிகள் மக்களின் தேவைகளை அறிந்து பொருளாதார வளர்ச்சிக்காக செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. மக்களை சேமிப்பில் ஈடுபடுத்து வதற்கு சகல உதவிகளையும் செய்து வருகிறது. மக்களுக் காக செயல்படுத்தும் திட்டங்களை மக்கள் பயன்படுத்துவதன் மூலம் மக்கள் வளர்ச்சியடைய முடியும்.வங்கிகள் உலகமயமாக்கலுக்கு அமைய புதிய மாற்றங்களை நோக்கி நகருகின்றன. (அ-5)

# யாழில் முடங்கி கிடந்த வாகனங்கள் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வாகனங்களுக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டதையடுத்து, வாகனங்களின் விலை கணிசமான அளவு அதிகரித்தமையால் யாழ்ப்பாணத்திலிருந்து டொல்பின், ஹையெஸ் போன்ற வாகனங்கள் கூடியவிலையில் விற்பதற்காக கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

இவ்வாகனங்கள் ஏ-9 பாதை திறந் திருந்த சமயம் தரைமார்க்கமாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்லப் பட்டவையாகும்.

யாழ்.கொழும்பு புகையிரத சேவை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து டொல்பின், ஹையெஸ் உட்பட ஆடம்பர வாகனங்கள் யாழ்.கொழும்பு பயணிகள் சேவையை நடத்திவந்தன. இந்நிலையில் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பலர் கொழும்பிலிருந்து வாகனங்களை வாங்கிவந்து யாழ்.கொழும்பு பிரயாண சேவையில் ஈடுபடுத்தினர்.

ஆனால் ஏ-9 தரைப்பாதை மூடப்பட்டதைத் தொடர்ந்து அவ்வாகனங்கள் வீடுகளில் முடங்கிக்கிடக்கின்றன. இவற்றை வாங்க எவரும் முன்வராததனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான வாகனங்கள் மீதான முதலீடு எதுவித வருமானமுமின்றி முடக்கப்பட்டு இருப்பது குறித்து உரிமையாளர்கள் கவலையடைந்திருந்தனர்.

எனினும் இவ்வாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் பிரகாரம் வாகனம் இறக்குமதிக்கான வரி அதி கரிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த வாகனங்களுக்குக் கொழும்பில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிட விரும்பாத யாழ்.வாகன உரிமையாளர்கள் கவனிப்பாரற்று உருக்குலைந்த வாகனங்களை அவசர அவசரமாக மெருகூட்டி கொழும்புக்கு அனுப்பும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இதுவரை தேடுவாரற்றுக்கிடந்த வாகனங்களுக்கு பெரும் கிராக்கி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# முதுகலை மாணி கற்கை நெறி நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆண்டுக்கான முதுகலைமாணி கற்கை நெறிகளான நூலக தகவல் விஞ்ஞானம், சனத்தொகை அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி, அபிவிருத்தி கற்கைநெறி ஆகிய நான்கு கற்கை நெறிகளுக்கான புதிய மாணவர்களை தெரிவதற்கான நேர் முகப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன என பட்டப்பின் கற்கை நெறிகளுக்கான பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்தார்.

இக் கற்கை நெறிகளுக்கான நேர்முகப் பரீட் சைகளில் நூலகத் தகவல் விஞ்ஞானத்திற்கானது. பெப்ரவரி 11ஆம் திகதி திங்கட்கிழமையும் சனத்தொகை அபிவிருத்திக்கானது பெப்ரவரி 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 14ஆம் திகதி வியாழன் வரையும் பிரதேச அபிவிருத்திக்கான நேர்முகப் பரீட்சை 15ஆம் திகதி வெள்ளி தொடக்கம் 19ஆம் திகதி புதன் கிழமை வரையும் அபிவிருத்தி கற்கை நெறிக்குரியது.

20ஆம் திகதி வியாழன் தொடக்கம் 25ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் இடம் பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சார்த்திகளுக்கான கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என்றும் கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் அலுவலக நேரத்தில் தம்மை தொடர்புகொள்ளுமாறும் பீடாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (அ-10)

# IIS ஆண்டுவிழாவும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

IIS நிறுவனத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறுவன தின விழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 02ஆம் திகதி காலை 9 மணிமுதல் சென்ஜோன்ஸ் கல்லூரி ஜுபிலி மண்டபத்தில் நிறுவன இயக்குநர் மு.விக்னேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் ஆண்டுதோறும் வழங்கப்படுவதுபோல் சிறப்புச் சித்தியெய்திய மாணவர்களுக்கு சிறப்பு விருதுகளும், இவ்வாண்டு அதி உயர்விருதாக அமரர் வைத்திலிங்கம் குலரட்ணம் ஞாபகார்த்தப் பரிசும் வழங்கப்படும்.

அமரர் வைத்திலிங்கம் குலரட்ணம் ஞாபகார்த்தப் பரிசினை செல்வி. சயந்தினி துரைராஜசிங்கம் பெறுகிறார்.

செல்வி உசித்தா சிவபிரகாசம், செல்வி பிரதீபா விமலதர்மையா, செல்வி கஜனி லோகசிவம், செல்வன் நேசரட்ணம் சிவனொலி, செல்வன் பாலசேகரம் ஜெயபிரகாஷ், செல்வி வினோதினி கிருபாகரன் ஆகியோர் சிறப்பு விருதுகளைப் பெறுகிறார்கள். (அ)

## சமூக அபிவிருத்தி மன்ற பணிப்பாளர் சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 26 ஆம் திகதி மன்றக்காரியாலத்தில்தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டு புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக திருமதி ஜெயமணி ஜோசவ்-சண்டிலிப்பாய், உபதலைவராக பொ.க. முதலியார் -சண்டிலிப்பாய், இணைப்பதிகாரியாகத் திருமதி நவநீதம் ஜெகதீசன்- நல்லூர், உறுப்பினர்களாக திருமதி ச. வித்தியானந்தன் -கோப்பாய், திருமதி ம. புஷ்பராணி -கோப்பாய், திருமதி க. தங்கரத்தினம்- கோப்பாய், தே. திருமேனி - கோப்பாய். ஏ.சீ. குணேந்திரன்- யாழ்ப்பாணம்.

திருமதி ஸ்ரீ. தனலட்சுமி -நல்லூர், ச.குமாரலிங்கம்-தெல்லிப்பளை, இ. குணசேகரன்-பருத்தித்துறை, திருமதி க. நகுலேஸ்வரி- உடுவில். ஆகியோர்தெரிவு செய்யப்பட்டனர்.

சமூக அபிவிருத்தி மன்றக்கழகத்தின் உறுப்பினர்கள் பங்கு பற்றிச் சிறப்பித்தனர். (அ)



வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலனசபை மற்றும் தொண்டர் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான முகாம் கடந்த வாரம் இடம்பெற்றது. அவ் இரத்ததான முகாமில் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கிவோரைப் படத்தில் காணலாம்.

# துணைவேந்தர் வாழ்த்து



எங்கள் செழுங்கலை நியமமான யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் திரு.மா.சின்னத்தம்பி அவர்களுக்கான மணிவிழா வாழ்த்தினை தரும் இந்த வேளை பெறுமதியானது.

கல்வியே ஒரு தேசத்தின் பெருஞ்செல்வம் அதனைக் காத்தும் வளர்த்தும் நிற்கும் கல்வியாளர் போற்றுதற்குரியவர்கள். கல்வியின் பொருளியலை (Economics of Education) தன் புலமை ஆர்வமாகக்கெண்ட சின்னத்தம்பி அவர்களின் ஆக்கங்களும் பணியும் எதிர்காலத்துக்கான எங்கள் கல்விச் சிந்தனையையும் செயற்பாட்டினையும் வளம்படுத்தி நிற்பன.

நிறைந்த நல்வாழ்வில் அகவை 60 இல் மகிழும் அவரும் குடும்பத்தினரும் நல்லனவெல்லாம் பெற்று எங்கள் சமூகத்தின் கல்வி அழகுக்கு அணியாய் விளங்கிட எல்லையிலா அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
துணைவேந்தர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

# புகழுடன் வளர்க

திருவாளர் மா. சின்னத்தம்பி அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் திரு.மா.சின்னத்தம்பி. இவ்வுலகில் மனிதராகப் பிறந்தால் புகழ் தோன்றுவதற்கு காரணமாகிய குணங்களோடு பிறக்க வேண்டும் அக்குணங்களில்லாதவர் பிறவாதிருத்தல் நல்லது.

திருவாளர் மா. சின்னத்தம்பி அவர்களை மிக நீண்டகாலமாகவே நானறிவேன். பல்வேறு வகையான திறமைகளையும் தன்னகத்தே கொண்டவர்; கடும் முயற்சியாளர். எவருடனும் சிரித்தமுகத்துடனும் சுவைப்படப் பேசுவதிலும் நுண்ணியகருத்துக்களை வெளிப்படுத்துவதிலும் வல்லவர். தனது பாடசாலைக்கல்வியை யா/வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் யாழ்./இந்துக் கல்லூரியிலும் கற்று கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். தனது B.A(Hons) B.Phil, M.A போன்ற பட்டங்களை பொருளியல் துறையிலேயே பெற்றார். Dip in Ed., M.Phil பட்டங்களை யாழ். பல்கலைக்கழகத்தில் பெற்றார். தற்போது தனது கலாநிதிப் பட்டத்தை பெறுவதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் தனது ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

பொருளியல் கற்பித்தலில் தனக்கென தனியானதொரு இடத்தைப் பெற்ற இவர் மாணவர்குழாத்தினரின் மனதில் அழியாத ஒரு இடத்தினைப் பெற்றவர். இவருக்குப் பக்கபலமாகத்திகழ்வதில் இவருடைய கற்பித்தல் திறனுமொன்று. எப்போதும் வாசிப்பதனூடாக புதியவற்றைத்தேட வேண்டும் என்ற ஆவல் எப்போதும் இவரிடம் காணப்படும். இவ்வாறான திறன்கள் இவருடைய சிந்தனை ஆற்றலையும் சிறகடிக்கவைத்துள்ளது. இவற்றால் இவர் தனக்கென ஒரு அத்தியாயத்தையே அமைத்துக்கொண்டார்.

இவரது ஆரம்ப காலங்களில் தனியார் கல்வி நிலையங்களில் பொருளியல் கற்பித்தலில் மிக உயர்வான நிலையில் புகழ் பெற்று விளங்கினார். "பொருளியல் என்றால் சின்னத்தம்பி தான்" என்றொரு தனிச் சிறப் பினை பெற்றவராக விளங்கினார். அலையலையாக இவரது வகுப்புக்களுக்கு மாணவர்கள் படையெடுத்த காட்சிகளை எவரும் இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள். இவரது கற்பித்தல் திறனும் வாசிப்பு திறனும் இவருடைய விடாமுயற்சியுமே பல்கலைக்கழகம் இவரை தன்னகத்தே இணைத்துக் கொண்டமைக்கான காரணமாகும். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் விரிவுரையாளர் தொழிலை ஆரம்பித்த இவர் யாழ்.பல்கலைக் கழகத்தில் நிரந்தர நியமனம் பெற்றதன் பின்னர் துறைத்தலைவர் பதவி உயர்ந்து சென்றார். தற்போதும் கூட கொழும்பு பல்கலைக்கழகம், இருந்த பல்கலைக்கழகம் வவுனியா வளாகம் போன்றவற்றிலும் விரிவுரை நிகழ்த்தி வருகின்றார்.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் -பொன்றாது நிற்பதொன்று இல்" (திருக்குறள் 24.3)

என்ற வாக்கினை போல அறிவுலகில் புகழ்பரப்பிக்கொண்டிருக்கும் திரு.மா.சின்னத்தம்பி அவர்களின் குடும்பமும் இனிமையான தொருகுடும்பம்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் - இல்லவள் மாணக்கடை" என்ற குறட்பாவுக்கு பொருத்தமான சிறந்த வாழ்க்கைத்துணையும், "பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த- மக்கட் பேறு அல்ல பிற" என்ற குறட்பாவுக்கும் பொருத்தமான சிறந்த மக்கட் செல்வத்தையும் திரு.மா. சின்னத்தம்பி இறைவனின் பாக்கியமாகக் பெற்றுள்ளார்.

எனவே ஒரு குடும்பத்தின் தலைவனாகவும் பாசமிகு தந்தையாகவும் அகத்தே சிறக்கும் திரு.மா. சின்னத்தம்பி புறத்தே சிறந்ததொரு ஆசானாக, விரிவுரையாளனாக, சிந்தனையாளனாக, அன்பனாக, நண்பனாக, முயற்சியாளனாக அனைவராலும் போற்றப்படுகின்றார்.

அவரது வாழ்வில் இன்னும் பல விழாக்களைக் காண அவர் சிறப்பிக்கப்பட வேண்டும் எல்லாம் வல்ல இறைவனை அதற்காக இறைஞ்சுகின்றோன்.

கு.திலகரெத்தினம்
வலயக்கல்விப் பணிப்பாளர், திருகோணமலை

## மாணவர் மனதில் தடம்பதித்த பேராசான் எம்.எஸ்

கற்றறிந்தோர் நயந்தேற்றும்
கடமை வீரன்
அற்புதமாய் ஆசிரியப் பணியதனை
அகிலமதில் ஆற்ற வல்லோன்
பெருமையுறு விரிவுரையாளர்
பேர் சொல்ல ஆயிரம் பேர் ஆக்கிவைத்தோன்
யாழ்நகரு மாணவரை கவர்ந்திழுப்போன்
கச்சிதமாய் விரிவுரைகள் ஆற்ற வல்லோன்
எத்தனையோ மாணவரின்
இதயமதில் இடம்பிடித்தோன்
ஆசான் என்ற சொல்லின்
அர்த்தமாய் நின்ற ஆசான்
இயந்திர உலகமதில் எமக்காய்
இதயத்தால் பணிசெய்த செம்மல்
முன்னாள் கல்வியிற் துறைத்தலைவரை
முழுமதிதன் இளமைபோடு களிப்புறவாழ்க ஐயா
எந்த நாள் கண்ட போதும்
எம்மவர் உயர வழி காட்டும் ஆசான்
புதியன தேடிக்கற்க எமக்குப்
புகட்டிய அறிவிறு சொல்லீர்
மாணவர் வேண்டும் தேவை
மகிழ்வுடன் ஆற்றவல்லீர்
அறிவிலே இமயம் ஐயா
அகிலத்தில் நூறாண்டு வாழ்க.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமதில்
பலர் பார்த்திட உயர்ந்து நின்றாய்
வாழ்க்கைக்காய் கல்விதனை எமக்கு
வார்த்தையால் வழங்கி வந்தாய்
தெளிந்த சிந்தை தென்னிய அறிவு
தேனினும் இனிமையிக்க விரிவுரை
ஆற்றிடாய்
மாணவர் மனதில் என்றும்
மகிழ்வுடன் இருப்பீர் ஐயா!
அகவை போர் அறுபதிலே
அவனியில் சிறப்பாய் வாழ்க!
வந்தனை செய்து உம்மை
வணங்கினோம் வாழ்க நூற்றாண்டு
வாழ்க வாழ்க

"தங்கள் ஆற்றுப்படுத்தலில்
வாழும்பள்ளி முதல்வர்கள்"

# அகவை அறுபதில் அகமகிழ்ந்த வ

## வளர்க! வளமுடன் வாழ்க!



ஒரு மனிதனின் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு மைல்கல் மணிவிழாவாகும். ஒரு மனிதவாழ்வின் அறுபது வருட காலப்பகுதியில் அவர் சாதனை, சேவை போன்றவற்றை எடைபோடும் சந்தர்ப்பத்தை மணி விழா உருவாக்குகிறது.

திரு.சின்னத்தம்பிக்கும் எனக்கும் உள்ள தொடர்பு சில தசாப்தங்களைத் தாண்டியது. அவர் தம் வாழ்க்கை பிறர்க்கு முன் மாதிரியாக அமைகிறது. பட்டப் படிப்பை முடித்து புகழ்பூத்த பொருளியல் ஆசிரியராக யாழ்.இந்துக் கல்லூரியில் இணைந்து படிப்படியாக உயர்ந்து யாழ்.பல்கலைக் கழகத்தின் கல்விப் புலத்தின் தலைவராகத் திகழ்வர். இந் நிலைக்கு அவர் சொந்த முயற்சியினாலும், திறமையினாலும் உயர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் விரிவுரையாளராகக் கடமையாற்றிய பொழுதினில் அவர் எப்போதும் தனது விரிவுரைகளை சிறந்த தயார்ப்படுத்தலுடனேயே ஆற்றிவந்தார். அத்துடன் கல்வியப் புலத்திற்குப் பயன்தரும் வகையில் பலதரமான நூல்க்ளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

பட்டம் கிடைத்தவுடன் கல்வி முடிவுற்றதாகப் பலரும் கருதும் வேளையில் திரு.சின்னத்தம்பி தொடர்ந்தும் கற்றுக்கொண்டே இருந்தார். இதன் பேறாக இவரின் விரிவுரைகள் கவர்சிகரமாகவும், மாணவர்களிற்கு பெரிதும் பெறுமதியுள்ளதாகவும் கருதப்பட்டது. இவர் எந்த விரிவுரையானாலும் சரி அதனை நன்றாகத் தயார் செய்தே நடத்திவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.சின்னத்தம்பி அவர்கள் தனது கல்வித்துறையில் மட்டும் நிற்காது சமூக சேவையிலும் ஈடுபாடுடையவர். றோட்டரிக்கழக அங்கத்தவராக இருந்து பல வருடங்கள் சேவையாற்றியவர். மேலும் மக்களுடன் பழகுவதிலும், சேவையாற்றுவதிலும் ஆர்வம் காட்டுபவர். பல நண்பர்களையும், மக்கள் தொடர்புகளையும் கொண்ட அவரை இவ்வேளையில் கல்விச் சேவையில் மேலும் வளர்ந்து தொண்டாற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அ.பஞ்சலிங்கம்
முன்னைனாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

## திரு.பீ.ஏ.அருமைநாயகம் வழங்கிய வாழ்த்துச் செய்தி

70களில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் எனது சக மாணவனாகவும், இன்று யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு.சின்னத் தம்பி அவர்களிற்கு மணி விழா எடுக்கும் செய்தியறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்கலைக்கழக காலம் முதல் பிறருக்கு உதவும் நற்பண்பினைக் கொண்ட சின்னத்தம்பியவர்கள் இன்றும் இப்பண்பினைக் கொண்டிருப்பதை என்னால் அறிய முடிந்தது. எங்கள் இடைநிலை முகாமைத்துவத்தில் கடமை புரிபவர்கள் தமது பதவி நிலை உயர்விற்கான எழுத்துப்பரீட்சைக்கு அவர் தனது கடமைகள், நேரம் என்பவற்றைப் புறந்தள்ளி அர்ப்பணிப்புடன் உதவியமை இச் சந்தர்ப்பத்தில் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் என்ற நிலையில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

நண்பர் சின்னத்தம்பி முதுநிலை விரிவுரையாளர் தரத்திலிருந்து பேராசிரியர் நிலைக்கு அவர் இவ் மணிவிழா ஆண்டில் உயர்ச்சியடைய இறைவனை இறைஞ்சுகின்றேன். அதேவேளை பேராசான் சின்னத்தம்பியின் பன்முகப்பணிகள் யாழ்ப்பாண கல்விச் சமூகத்திற்கு தொடரவேண்டும் என்பதே என் ஆதங்கம் அவரது பணிகள் தொடர வாழ்த்துகளுடன்.

பி.ஏ.அருமைநாயகம்
வடமாகாண அலுவலகம், இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திரு. மா சின்னத்தம்பி அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில்பெரு மகிழ்ச்சியடைகின்றேன். திரு. மா. சின்னத்தம்பி அவர்கள் மிகச் சிறந்த பிரபலமான நல்லாசிரியராக எமது மாவட்டத்தில் சேவையாற்றியுள்ளார். கல்வி முகாமைத்துவத்துறையில் மிகுந்த ஆற்றலும் ஆர்வமும் உடையவர்.இத்துறை சார்ந்த பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் ஆக்கியுள்ளார். ஆசிரியர். அதிபர் கல்வியியலாளர்களுக்கு பல செயலமர்வுகளை நடாத்தி அவர்களுடையவாண்மைகளை உயர்வித்துள்ளார். திருவாளர் சின்னத்தம்பி அவர் கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி ஆரம்பித்த காலத்திலிருந்து அதன் வளர்ச்சிக்கு பல்வேறு உதவிகளையும் , ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கல்வியியல் முதுமாணி அபிவிருத்தி க்கல்வி என பல பாடத்துறைகளுக்குச் சிறந்த ஆற்ற லுள்ள விரிவுரையாளராகப் பிரகாசித்து வரும் திரு. மா சின்னத்தம்பி அவர்களுடைய கல்விப் பணி எமது பிரதேசத்திற்கு மேலும கிடைக்க வேண்டும். இன்று மணிவிழாவினை மகிழ்வுடன் கொண்டாடும் இவருக்கு எனது வாழ்துக் களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.எஸ்.கே.யோகநாதன்
யாழ்ப்பாணம் தேசியக்கல்வியியற் கல்லூரி.


## நாமெல்லாம் வாழ்த்துகிறோம் நலம் பெற்று வளம் தருக

அறிவு ஆட்சி செய்கின்ற அகவை அறுபதில் அடியெடுத்து வைக்கின்ற அன்பான ஆசானே! கல்வியினால் எல்லாம் ஆகும் என்னும் நவீன கல்விக் கொள்கையினை அன்று முதல் இன்று வரை ஆணித்தரமாக உரைத்து உழைத்தீர்கள் கால சாகரத்தில் அலையுண்டு நலிவுற்ற எம் கல்விச் சமூகத்தில் நம்பிக்கை நட்சத்திரமாக வழி காட்டினீர்கள்.

ஆசிரியத்துக்கு உந்துவிசை கொடுத்து அதிபர்களுக்கு உறுதுணையானீர்கள். உங்கள் போதனைகள் எல்லாம் எம்மவரால் சாதனைகளாக பள்ளித் தலங்களிலே பரிணமித்தன கல்வி தொடர்பான தங்களது உலகளாவிய தேடல்களால் எம்மையெல்லாம் வளப்படுத்தி தினப்படுத்தி உயிர்ப்புக் கல்வி உடையோராவதற்கு நல்வழி காட்டினீர்கள்.

ஆக்க பூர்வமான தங்களது ஆலோசனை வழிகாட்டல்களால் நிலைப்பட்டு மேம்பட்டோர் ஏராளம் இன்முகமும் புன்சிரிப்பும் நோய்க்கு மருந்தன்ன மானிடத் தொடர்பாடலும் ஆத்மார்த்த ஈடுபாடும் உங்களுக்கேயுள்ள உயர் குணங்களாகும். பள்ளி முதல்வர்களாம் எம்மீது தாங்கள் கொண்ட இடையறாத அக்கறையும் வழிபடுத்தலும் வாண்மையூட்டலும் என்றும் தொடர இறைவனை வேண்டுகின்றோம் அகவை அறுபதில் நலம் பல பெற்று எமக்கெல்லாம் வளம் தருகவென வாழ்த்துகிறோம்.

பள்ளிகளின் கல்வி முதல்வர்கள்.



## மாரிமுத்து சின்ன

B.A.,B.Phil(Hons); Dip.in E
MA(Economics),M.Phil

சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம்
கல்வியியல்துறை, யாழ்ப்பாணப்

## வாழ்வும் -வள

1. பாடசாலைக்கல்வி
   - *யா/ பாரதி பாஷிய வித்தியாசாலை
   - *யா/ கொட்டடி நமசிவாய வித்தியாசாலை
   - *யா/ வைத்தீஸ்வராக்கல்லூரி
   - *யா/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
2. உயர்கல்வி
   - *பொருளியல் சிறப்புப்பட்டம் :-கொழும்
   - *கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா, கல்
   - *பொருளியல் முது கலைமாணி யாழ்ப்பா
3. தொழில்வாழ்க்கை
   - *பொருளியல் விரிவுரையாளர்- பட்டதாரிகள் கல்லூரி வட்டுக்கோட்டை
   - *பொருளியல் ஆசிரியர் - (1974-1989)
   - *வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி சுழிபுரம் பாணம் இந்துக்கல்லூரி.
   - *சமூகக்கல்வி சேவைக்கால ஆலோசகர் (1
   - *பல்கலைக்கழக ஆசிரியப்பணி கல்வியியல் கல்வியல் சிரேஷ்ட விரிவுரையாளர் (1997- தலைவர் (2003-2006)
4. ஆய்வும், நூல் வெளியீடுகளும்
   - *எழுதி வெளியிடப்பட்ட நூல்கள்

   *(அ) பொருளியல்நூல்கள்*
   - *பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்க
   - *அரசநிதி - இருபதிப்புக்கள்
   - *தேசிய வருமானம் - இருபதிப்புக்கள்
   - *வெளிநாட்டு வியாபாரம்
   - *சென்மதி நிலுவை
   - *பணம்
   - *வங்கியியல்

   *( ஆ)கல்வியியல் நூல்கள்*

   வடகிழக்கு மாகாண சபையால் சிறந்த உயர் நூல்கள்
   - *ஆசிரிய முகாமைத்துவம் (2004)
   - *இலங்கையில் முகாமைத்துவக்கல்வி (200

   **ஏனைய கல்வியியல் நூல்கள்**
   - *கல்வியின் பொருளியல் (2007) பாடசா
   - *இலங்கையின் கல்விச் செலவு (2005)
   - *சுனாமியால் பாதிப்புற்ற பாடசாலை க
   - *இணைந்து எழுதிய நூல்கள்
   - *கல்வியும்மனித வள விருத்தியும் ( இருபதிப்புக்கள் 2002,2006)

   கல்வித்திட்டமிடல்- கோட்பாடுகளும் புதி

   *(இருபதிப்புக்கள் 2000,2006)*
   - *யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஆராய்ச் ளப்பட்ட ஆய்வு
   - *யாழ்ப்பாண மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்க தேசிய கல்வி நிறுவகம் (NIE) மற்றும் யுனி ஆய்வா ளராகபணியாற்றி வெளிவந்த ஆ Rapid Needs Assessment Survey Educat Affected Areas of Sri Lanka (2003)
5. தற்போதைய கற்பித்தல் மற்றும் மதிப்பீ பல்கலைக்கழகங்கள்
   - *யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்
   - *இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
   - *கொழும்பு பல்கலைக்கழகம்.

## இன்று ஒரு தகவல்

# துறவி

ஓர் அரசன் தனது அமைச்சருடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அமைச்சரவைப் பார்த்து ஆசை இல்லாமல் ``ஒரு மனிதனால் இருக்க முடியுமா?'' என்று கேட்டான் ``ஏன் முடியாது? துறவிகள் எல்லாம் அப்படிப்பட்ட வர்கள் தானே?'' என்றார் அமைச்சர். ``அவர்களெல்லாம் உண்மையிலேயே அசையை விட்டவர்களா?'' அப்படியானால் ஆசையே இல்லாத ஒரு உண்மையான துறவியை நான் பார்க்க வேண்டும் என்றான் அரசன்.

``அது என்ன பிரமாதம்? அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று புறப்பட்ட அமைச்சர் அங்கே, இங்கே என பல இடங்களிலும் தேடினார். அப்புறம்தான் அவருக்குப் புரிந்தது உண்மையான துறவியைக் கண்டுபிடிப்பது எவ்வளவு கஷ்ட மான காரியம் என்பது! இருந்தாலும் ராஜா விடம் சொல்லியாகி விட்டதே... ராஜா சொன்னபடி நடக் காவிடில் அவருக்குக் கோபம் வந்துவிடுமே... என்று யோசனை செய்தார். கடைசியாக அவருக்கு ஒரு வழி புலப்பட்டது.

அந்த ஊரிலே அவருக்குத் தெரிந்த நாடக நடிகர் ஒருவர் இருந்தார். அவரைப் போய்ப் பார்த்தார். எனக்காக ஒரு உதவி செய்ய வேண்டும். நீ ஒரு துறவி மாதிரி கொஞ்ச நேரம் நடிக்க வேண்டும். உனக்கு பத்தாயிரம் ரூபா தருகி றேன் என்றார். அவரும் சரி என்று ஒப்புக்கொண்டார். அமைச்சர் அரண்மனைக்குத் திரும்பினார். ``என்ன அமைச்சரே... இன்னுமா உண்மையான துறவி கிடைக்கவில்லை?'' என்று ராஜா கேட்டார். ``உண்மையான துறவி ஒருவரை இப்பொழு தான் பார்த்துப் பேசிவிட்டு வருகி றேன்... அவர் நமது ஊருக்கு வெளியே குலிக்கரையி லேயுள்ள ஆல மரத்தின் அடியிலே உட்கார்த்திருக் கிறார்'' என்றார் அமைச்சர். ``அப்படியா? உடனே புறப்படுங்கள் என்றராஜா பரிவாரங்களுடன்புறப்பட்டார்.'' அங்கே அந்த ஆலமரத்தடியில் அந்த நாடக நடிகர் துறவி வேடத் தில் உட்கார்ந்திருந்தார்.

ராஜா நேராக துறவியிடம் போனார். அவர் காலிலே விழுந்து வணங்கினார். அடுத்து ராணியும் விழுந்து வணாங்கினார். பின் அமைச்சர் வணங்கினார். பரிவாரங்கள் எல்லாம் துறவியின் காலிலே விழுந்து வணங்கினார்கள். ராஜா தங்கத் தட்டிலே பொன்னையும் பொருளையும் வைத்து இதை என் காணிக்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென'' வேண்டினார். அந்தத் துறவி பற்றில்லாமல் அதனைப் பரர்த்தார். ``பற்றுக்கள் எல்லாவற்றையும் துறந்த எனக்கு இது எதற்காக? என்று கூறி அதை ஏற்க மறுத்துவிட்டார். ''ஆகா!... உண்மையான துறவியைப் பார்த்து விட்டோம் என்ற ஆனந்தம் ராஜாவுக்கு. மனத்திருப்தியுடன் அரண்மனைக்குத் திரும்பினார். அதன்பின் அமைச்சர் யாருக்கும் தெரியாமல் அந்தத் துறவியிடம் ஓடினார். சொன்னபிரகாரம் பத்தாயிரம் ரூபாவை நீட்டினார். நான் சொன்னபடி பத்தாயிரம் ரூபா கொண்டு வந்திருக்கிறேன் வெற்றுக்கொள் என்றார். துறவி அமைச்சரை நிமிர்ந்து பார்த்தான். ``எல்லாவற்றையும் துறந்துவிட்ட எனக்கு இது எதற்காக?'' என்றார்.

``நடித்தது போதும் வேஷத்தைக் கலை'' என்றார் அமைச்சர். ``இல்லை... இது வேஷமும் இல்லை... வசனமும் இல்லை... இது உண்மை... கொஞ்ச நேரம் துறவியாக நடித்ததற்கே இந்தத் தேசத்து ராஜா, ராணி, அமைச்சர் பரிவராங்கள் எல்லாம் என் காலிலே விழுந்து வனங்கினார்கள். துறவிவேடம் போட்ட எனக்கே இவ்வளவு மரியாதை என்றால் உண்மைத் துறவிக்கு எவ்வளவு மரியாதை இருக்கும்! நான் துறவியாகவே மாறத் தீர்மானித்து விட்டேன்...! எனக்கு பணத் தந்து என்னை மாற்ற முயற்சியாதீர்கள் என்றார் அவர். வேஷம் கூட எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது பார்த்தீர்களா?

நம்ம ஆள் ஒருவர்.. ரொம்ப வசதியாகத்தான் இருந்தான். ஒருநாள் அவன் சொத்து முழுவதும் திருட்டுப் போய் விட்டது... அதன் பின் அவன் துறவிமாதிரி ஆகிவிட்டான். ஊர் ஊராகச் சுற்றினான். ஒரு குருவைத் தேடிக் கண்டு பிடித்தான். அவருக்கு சீடனானான். அவனைப்பார்த்து ஒருவன் கேட்டான். நீ உண்மையாகவே அந்தத் துறவி யின் சீடனா?'' என்று.

``இல்லை, சீடன் மாதிரி நடிக்கிறேன்'' என்றான் அவன். அது குருத்துரோகம் அல்லவா? என்றார் அவர். ``இல்லை... நான் செய்வது குருத்துரோகம் இல்லை... என் குரு செய்தது தான் துரோகம்! என்னுடைய சொத்தையெல்லாம் கொள்ளையடித்தது இவர்தான். அந்தச் சொத்துக் களை எங்கே வைத்திருக்கிறார் என்பதைக் கண்டு பிடிப்பதற்காகத் தான் அவரின் சீடனாக மாறி அவருக்குப் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கிறேன்...'' என்றான் அவன்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# விடுதலைப்புலிகளுக்கு மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டதா? - தீவிர விசாரணை

(கொழும்பு)

கோவை பீளமேடு புதூரில் செயல் பட்டு வந்த நுகர்பொருட்கள் ஆன் லைன் வர்த்தக நிறுவனம், அனுமதியின்றி மருந்து பொட்களை வெளி நாடுகளுக்கு வர்த்தகம் செய்து வந்தது தெரிய வந்தது. இதனை தொடர்ந்து போதை பொருட்கள் தடுப்பு பிரிவின் தென் மண்டல இயக்குனர் டேவிட்சன் தேவாசீர்வாதம் தலைமையிலான அதிகாரிகள் நேற்று முன் தினம் அதிரடி சோதனை நடத்தி பீளமேடுபுதூர் நிறுவன மேலாளர் ராமகிருஷ்ணனை கைது செய்தனர்.

அவரிடம் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அவரிடம் நடத்திய விசாரணையில் ஆன் லைன் மூலம் அனுமதியில்லாமல் மருந்து பொருட்கள் கடந்த 3 ஆண்டு களில் ரூ.4 கோடிக்கு மேல் வர்த்தகம் தெரியவந்துள்ளது. இவர்கள் வர்த்தகம் செய்ததில் பெரும்பாலானவை மயக்க மருந்துகள் ஆகும். மருந்துக் கம்பனிகள் ஒரு நிறுவனத்திற்கு மயக்க மருந்துகள் அதிகம் வழங்க முடியாது. ஆனால் இந்த நிறுவனத்திற்கு அதி களவில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்திற்கு ஏராளமான மருந்து கம்பனிகள் மயக்க மருந்து களை வழங்கி வந்துள்ளன. அந்த கம்பனிகள் எது? என்று தீவிரமாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. கோவையில் உள்ள இரு மருந்து கம் பனிகளின் மீது விசாரணை அதிகாரிகளுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே கைது செய்யப்பட்ட மேலாளர் ராமகிருஷ்ணனிடம் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் மருந்து விலை குறைவு என்பதால் இங்கிருந்து வெளிநாடு களுக்கு மருந்துகளை கடத்தி அதிக விலைக்கு விற்றுபணம் சம்பாதித்துள்ளனர்.

இதேபோல் மேலும் பல ஆன் லைன் வர்த்தக நிறுவனங்கள் அனுமதியின்றி மருந்து பொருட்களை வெளிநாடுகளுக்கு விற்று வரலாம் என்றும் போதை பொருட்கள் தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே கோவையில் உள்ள மற்ற ஆன்லைன் வர்த்தக நிறுவனங்களிலும் அதிரடி சோதனை நடத்தி விசாரணை மேற்கொள்ள அதி காரிகள் முடிபு செய்துள்ளனர்.

மேலும் வெளிநாடுகளுக்கு மருந்து பொருட்கள் விற்பனை செய்த பீள மேடு புதூர் நிறுவனத்தில் இருந்து விடுதலைப்புலிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளதா என்று அந்நிறுவனத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் இ.மெயில் முகவரி களை வைத்து விசாரணை நடத்தப் படுகிறது. (அ-5)

# மதவாச்சியில் தடுத்துவைக்கப்பட்ட வாகனத்துக்கும் உலக உணவுத் திட்டத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை

## வதிவிடப் பிரதிநிதி காரிஹீன்

(கொழும்பு)

மதவாச்சியில் பொலிஸாரினால் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக கூறப் படும் கொள்கலன் வாகனம் ம்ற்றும் அதிலுள்ளதாக கூறப்படும் பொருட்களுக்கும் உலக உணவுத்திட்டத்துக் கும் எவ்வித தொடர்பும் கிடையாது என உலக உணவுத்திட்டத்தின் இலங் கைக்கான வதிவிடப் பிரதிநிதி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் உலக உணவுத் திட்டத்தை தொடர்புபடுத்தி வெளியான செய்திகள் தொடர்பில் தாம் அதிர்ச்சி யடைந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

சர்ச்சைக்குரிய கொள்கலனுடன் உலக உணவுத்திட்டத்தை தொடர்பு படுத்தி வெளியான தகவல்கள் குறித்து கருத்துத் தெரிவித்த உலக உணவுத் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி மொஹமட் சாலிஹீன் மேலும் கூறியதாவது,

இச்சம்பவத்துடன் உலக உணவுத்திட்டத்தை தொடர்புபடுத்தி வெளியான தவறான செய்திகள் குறித்து நான் அதிர்ச்சியடைந்துள்ளேன். உண்மையற்ற மேற்படி செய்திகள் குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன். மதவாச்சியில் பொலிஸாரினால் கடந்த சனிக்கிழமை தடுத்து வைக்கப்பட்டுள்தாக கூறப்படும் கொள் கலன் வாகனத்துக்கும் உலக உணவுத்திட்டத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

அதில் உள்ளதாக கூறப்படும் போஷாக்குச் செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்கள், உலக உணவுத்திட்டத்தால் விநியோகிக்கப்படும் உணவு வகைகளில் அடங்கவில்லை. உலக உணவுத்திட்டத்தால் இறக்குமதி செய்து விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்கள் குறித்து இலங்கை நன்கு அறிந்துள்ளது என தெரிவித்தார்.

இதேவேளை உலக உணவுத்திட்டத்தின் சகல செயற்பாடுகளும் தேசத்தை கட்டியெழுப்பும் அமைச்சின் ஊடாகவே மேற்கொள் ளப்படுவதாகவும் உணவு விநியோகம் உள்ளிட்ட சகல நடவடிக்கைகளுக்காகவும் உலக உணவுத்திட்டம் குறித்து அமைச்சின் ஊடாகவே நிதியொதுக் கீட்டை செய்வ தாகவும் உலக உணவுத்திட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், மேற்படி கொள் கலன் உலக உணவுத்திட்டத்துக்கு சொந்தமானது, என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம், பாதுகாப்பு மற்றும் இராணுவம் என்பவற்றின் இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

# இராசிபலன்

30.01.2008

(தை 16, புதன்கிழமை)

சுவாதி முன்னிரவு 08.33 மணிவரை

அட்டமி பின்னிரவு 01.05 மணிவரை

இராகுகாலம் 12.36-02.06 மணிவரை

சுபநேரம்-05.06-06.36 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மனோதைரியம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| இடபம் | சத்துரு ஜெயம், ஆரோக்கியம், தடைப்பட்ட காரியம் கைகூடும். |
| மிதுனம் | அஜீரண ரோகம், முயற்சி தாமதம், பணக்குறைவு. |
| கடகம் | தன்னம்பிக்கைக் குறைவு, தன விரயம், உறவினர் சந்திப்பு. |
| சிங்கம் | நற்கீர்த்தி, பிரயாண நன்மை, சகோதரர் உதவி . |
| கன்னி | செல்வாக்கு குறைவு, வேலைச் சுமை, முயற்சி தாமதம். |
| துலாம் | வெகுமானம், பெரியோரால் நன்மை, கற்பன்ன மிகுதி. |
| விருச்சிகம் | அமைதிக்குறைவு, காரிய தடங்கல்; பணவிரயம். |
| தனுசு | தனதானிய சேர்க்கை, சயன சுகம், குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| மகரம் | பெரியோரால் மதிக்கப்படுதல், தூரதேசச் செய்தி, மனமகிழ்ச்சி. |
| கும்பம் | சரீரப்பிரயாசை, ஆரோக்கியக் குறைவு, எதிர்பாராத செலவு. |
| மீனம் | முழங்கால் வலி, பகைவரால் தொல்லை, காரிய தடங்கல். |

வலவன்

# அதிக புரதச் சத்துகொண்ட பிஸ்கட்கள் மதவாச்சியில் தடுத்துவைத்து விசாரணை

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

உலக உணவு நிறுவனத்தினால் வன்னிப் பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட அதி உயர்ந்த புரதச் சத்துக்கள் கொண்ட 39 ஆயிரத்து 800 கிலோ கிராம் பிஸ்கட் வகைகள் மதவாச்சி பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பிஸ்கட் வகைகளை ஏற்றிச் சென்ற ட்ரக் வண்டியின் சாரதியிடம் மதவாச்சிப் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டபோது, அவை வன்னியில் உள்ள உலக உணவு நிறுவனத்தின் காரியாலயத்துக்கு சுகாதார அமைச்சின் அங்கீகாரத்துடன் எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறியுள்ளார்.

எனினும் இது பற்றி சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் எமது இணையம் தொடர்பு கொண்டு கேட்ட போது இந்த வகையான பிஸ்கட் விநியோகம் குறித்து தமக்கு எதுவும் தெரியாதெனவும் உலக உணவு நிறுவனத்துடனோ அல்லது வேறு நிறுவனங்களுடனோ இவ்வகையான நடவடிக்கைகளில் அமைச்சு ஈடுபடவில்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களே இவ்வகையான உயர் புரதச் சத்துக்கள் கொண்ட பிஸ்கட் வகைகளை உட்கொள்கின்றனர் என்றும், எமது பாதுகாப்புப் படையினரும் இது போன்ற வேறு ரக பிஸ்கட்வகைகளை உணவாகக் கொள்கின்றனர் எனவும் இச்சம்பவம் தொடர் பாக விசாரணை நடத்திவரும் மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-5)



சுன்னாகம் லயன்ஸ் கழகம் நடாத்திய 'உழவர் விழாவில்' கோமாதாக்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட செஞ் சொற் செல்வர் ஆறு திருமுருகன் (பிரதி அதிபர் யா. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அவர்கள் சிறப்புரை ஆற்றுவதையும் காணாம்.

# இலங்கைக்கு புதிய பாதுகாப்பு சட்ட மூலம் அவசியம்

## ஸ்கொட்லாந்து பொலிஸின் முன்னாள் பணிப்பாளர் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கைத்தீவின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஸ்கொட்லாந் தில் உள்ளதைப்போல் புதியதொரு பாதுகாப்பு சட்ட மூலத்தை உருவாக்க வேண்டியது அவசியம் என்று ஸ்கொட்லாந்து பொலிஸின் முன் னாள் பணிப்பாளரும் ஸ்கொட்லாந்து பொலிஸ் மக்கள் பிரிவு பயிற்சி இயக்குனருமான கலா நிதி டேவிட் கார்பர் தெரிவித்தார்.

பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில்-உள்ள புரிந்துணர்வு பேணிக்காக் கப்படல் வேண்டும் என்றும் அவர் கூறினார். ஸ்கொட்லாந்து பொலிஸ் மக்கள் பிரிவின் ஊடாக இலங்கை பொலிஸ் திணைக்களத் தால்அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் மக் கள் பிரிவு அதிகாரிகளுக்கு பயிற்சிநெறி யொன்றை வழங்குவதற்கு பொலிஸ் திணைக் களம்ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பாக நாட்டின் அனைத்து பொலிஸ் மக்கள் பிரிவு உயர் அதிகாரிகளுக் கும் விளக்கும் கூட்டமொன்று கொழும்பு ஒல் கொட்மாவத்தையில் அமைந்துள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலக மாநாட்டு மண்ட பத்தில் இடம்பெற்றது.

இதில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் மக்கள் பிரிவு சிரேஷ்ட ஆலோசகர் ஜெயந்த விக்கிரம ரட்ண, பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள், பயிற் சியில் கலந்து கொள்வதற்காக தேர்ந்தெடுக் கப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஸ்கொட் லாந்தின் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஸ்கொட் லாந்தின் பொலிஸ் மக்கள் பிரிவு தலைவர் மைக் நீசோ உட்பட ஆறுபேர் அடங்கிய பயிற்சிக் குழு வும் கலந்து கொண்டிருந்தது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய டேவிட் கார்பர் மேலும் கூறியதாவது ஸ்கொட் லாந்து பொலிஸ் மக்கள் பிரிவினால்கொடுக்கப்படு கின்ற பயிற்சியானது மிகக் குறுகிய காலத்தைக் கொண்டதாகும்.ஆனால் இதன் பலன்கள் மிகப் பெரியவை.

அதன் காரணத்தினாலேயே ஸ்கொட்லாந் தில் பொலிஸ் மக்கள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் அது சிறப்பாகவும் செயற்பட்டு வரு கின்றது. இலங்கை அரசாங்கத்தின் வேண்டு கோளுக்கு இணங்கவே அந்த பயிற்சி நெறி இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. ஸ்கொட்லாந் தைப் பொறுத்தவரையில் நாட்டின் பாதுகாப்பு சட்டத்திற்கு அமுல்படுத்தப்பட்டிருக்கும் சரத்துக் களுக்கு அப்பால் புதியதொரு சட்டமூலம் உரு வாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அங்கு பாதுகாப்பு உறுதிப்படுத் தப்பட்டுள்ளதுடன் பொது மக்களுக்கும் பொலி ஸாருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு ஏற் படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு நாட்டினது பாது காப்பில் பொதுமக்களின் ஆதரவின்றி எதனை யும் சாதித்து விட முடியாது.

எனவே இலங்கைத் தீவின் பாதுகாப்பினை பலப்படுத்திக் கொள்ள வும் அதனை தக்கவைத்துக் கொள்ளவும் இங்கி ருக்கும் பாதுகாப்பு சட்ட மூலத்தை விடவும் பிறி தொரு புதிய நடைமுறையிலான சட்டமூலம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெயந்த விக்கிரம ரத்ண**

இங்கு உரையாற்றிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் மக்கள் பிரி வின் சிரேஷ்ட அதிகாரியுமான ஜெயந்த விக்கிரம ரத்ண பொலிஸ் மக்கள் பிரிவு பயிற்சி நெறி குறித்து பயற்சியாளர்களுக்கு தெளிவுபடுத் தினார். அத்துடன் எமது நாட்டின் அசாதாரண சூழ்நிலையை கருத்திற் கொண்டு பாதுகாப்பு அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமே இந்த பயிற்சி நெறி.

பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் மற்றும் ஆலேர்சகரின் வேண்டுகோளுக் கிணங்கவே ஸ்கொட்லாந்து பொலிஸ் மக்கள் பிரிவு பயிற்சி யாளர்கள் இங்கு வந்துள்ளனர். இந்த சந்தர்ப் பத்தை நாம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த பயிற்சியானது இலங்கைப் பொலிஸ் திணைக்களத்துக்கு மிகவும் நன்மையளிக்கும் என்று நம்புகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

**காமினி நவரத்ன**

பொலிஸ் மக்கள் பிரிவு பொறுப்பாளர் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன கூறுகை யில், நாட்டில் அமுல்படுத்தப்படவுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்திற்கமைய அதிகாரங்கள் பரவ லாக்கப்படும் போது அதில் பாதுகாப்பு பரவலாக் கப்படவேண்டும்.

அந்த வகையில் 13ஆவது திருத்தச்சட் டத்தை பலப்படுத்தும் வகையிலும் அதனூடாக நாட்டினதும் பொதுமக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இந்த பயிற்சி நெறி சிறந்த தாக அமையும் என்றார். (அ-5)

# இலங்கை வாலிபருக்கு போலிக் கடவுச்சீட்டு பொலிஸ் விசாரணையில் திடுக்கிடும் தகவல்

(சென்னை)

பெரம்பூரில் பிடிப்பட்ட இலங்கை வாலி பருக்கு போலியான பெயரில் சான்றிதழ் கொடுக்க சிரேஷ்ட ஐ.ஏ.எஸ் அதிகாரி பரிந்துரை செய்துள்ளது விசாரணையில் தெரியவந்துள் ளது.

பெரம்பூர் காமராஜர் நகர் 7ஆவது தெரு வில் விஜயா என்பவரின் வீட்டில் இலங்கையை சேர்ந்த 4 வாலிபர்கள் தங்கியிருந்தனர். அவர் கள்·மீது சந்தேகம் அடைந்த பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

பொலிஸார் விரைந்து சென்று அந்த வீட்டில் இருந்த 4 வாலிபர்களை கைது செய்தனர்.

விசா ரணையில் அவர்கள் பெயர் தவரஞ் சன் (வயது 24) டெனால்ட் (வயது 26) கிரிலை யாக் (வயது 25) உமாமகேஷ்வர் (வயது 27) என்பது தெரிய வந்தது.

இவர்களில் தவரஞ்சன், டொனால்ட் ஆகி யோர் கும்மிடிப்பூண்டி பொலிஸ் நிலையத்தில் தங்களை பற்றிய விவரங்களை பதிவு செய்தி ருப்பதாக பொலிஸாரிடம் தெரிவித்திருந்தனர்.

கிரிலையாக் வளசரவாக்கதில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தன்னை பற்றிய விவ ரங்களை தெரிவித்து இருப்பதாக பொலி ஸாரிடம் கூறியிருந்தான்.

உமாமகேஸ்வரிம் பொலிஸார் விசாரணை மேற்கொண்ட போது அவரின் பேச்சில் முரண் பாடுகள் தெரிந்தது.

உமாமகேஷ்வரனிடம் பொலிஸார் விசா ரணை நடத்தினர்.

விசாரணையில் அவர் மண்ணடியை சேர்ந்த சதீஷ் என்பவர் மூலம் ஒரு சிரேஷ்ட ஐ.ஏ.எஸ். அதிகாரியின் பரிந்துரை பெற்று தக்கல் முறை யில் போலியான பெயரில் கடவுச்சீட்டு பெற்றி ருப்பது தெரியவந்தது.

இதை கடவுச்சீட்டு அலுவலகத்தில் பொலி ஸார் உறுதி செய்தனர்.

இதை தொடர்ந்து அவர் கைது செய் யப்பட்டார். அவருக்கு போலி கடவுச்சீட்டு தயா ரிக்க உதவிய சதீஷை பொலிஸார் தேடி வரு கின்றனர்.

மேலும் பரிந்துரை செய்த ஐ.ஏ.எஸ். அதி காரியிடம் பொலிஸார் விசாரணை நடத்த முடிபு செய்துள்ளனர். (அ-5)

# பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட பள்ளிக் குழந்தைகள் பத்திரமாக விடுவிக்கப்பட்டனர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சமீப காலமாக தீவிரவாத தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. அல்-கொய்தா மற்றும் தலிபான் இயக்கங்களை சேர்ந்த தீவிரவாதிகள், ஆப்கானிஸ்தான் எல் லையில் உள்ள வசீரிஸ்தான் பகுதியில் முகாம் களை அமைத்துள்ளனர். அவர்கள் அங்கிருந்த படி பாகிஸ்தானின் மற்ற இடங்களில் ஊடுருவி வன் முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டில் ஜுன் மாதம் இஸ்லா மாபாத் தில் உள்ள லால் மசூதியில் பதுங்கியிருந்த தீவிர வாதிகளை, இராணுவம் விரட்டி அடித்தது. அப் போது நடந்த சண்டையில் ஏராளமான தீவிர வாதிகள் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து பாகிஸ்தானின் பல இடங்களில் தீவிரவாதிகள் அடுத்தடுத்து பயங்கர தற்கொலை தாக்குதல் களை நடத்தினர். இவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் பலியானார்கள். உச்சக்கட்டமாக அந்நாட் டின் முன்னாள் பிதமர் பெனாசீர் பூட்டோ சுட்டுக் கொல்லப்பட்டார். இதையடுத்து வசீரீஸ்தான் பகுதி யில் உள்ள தீவிரவாதிகளை வேட்டையாடும் பணி யில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபட்டுள்ளளது.

இந்த நிலையில் தீவிரவாதிகள் ஒரு பள்ளிக் கூடத்திற்குள் புகுந்து 250 குழந்தைகளை பண யக்கைதிகளாக சிறைப்பிடித்தனர். இது பற்றி தகவல் கிடைத்ததும் பள்ளிக் கூடத்தை பாது காப்பு படையினர் சுற்றிவளைத்தனர். எனினும் தீவிரவாதிகள் ராக்கெட் லாஞ்சர், கையெறி குண் டுகள் போன்ற பயங்கர ஆயுதங்களை வைத் திருந்ததால், பள்ளிக்குள் அவர்கள் செல்ல வில்லை.

சிறைப்பிடிக்கப்பட்ட குழந்தைகளை மீட்பதற் காக உள்ளூர் அதிகாரிகள் மூலம் தீவிர வாதி களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப் போது தாங்கள் 7 பேரும் பத்திரமாக தப்பிச் செல்ல அனுமதித்தால் குழந்தைகளை விட்டு விடுவதாக தீவிரவாதிகள் கூறினார்கள்.

அந்த கோரிக்கையை வடமேற்கு எல்லைப் புற மாகாண அரசு ஏற்றுக்கொண்டது. உடனே பள்ளியைச் சுற்றி குவிக்கப்பட்டு இருந்த பாது காப்புப் படையினர் விலக்கிக் கொள்ளப்பட்டனர். அதைத் தொடர்ந்து பள்ளிக்குள் பதுங்கி இருந்த தீவிரவாதிகள், சிறைப்பிடித்து வைத்திருந்த 250 குழந்தைகளையும் விடுவித்துவிட்டு அங் கிருந்து தப்பிச் சென்றனர். இதையடுத்து குழந் தைகள் அனைவரும் பீதியுடன் வெளியில் ஓடி வந்தனர். அவர்களை பெற்றோர்கள் அழைத் துச்சென்றனர். (அ-5)

# தாய்லாந்தின் புதிய பிரதமராக மக்கள் சக்தி கட்சியின் தலைவர்

தாய்லாந்தின் பாராளுமன்றமானது, மக் கள் சக்தி கட்சியின் தலைவர் சாமக் சன்ட ரா வேஜை அந்நாட்டு புதிய பிரதமராக தெரிவு செய் துள்ளது. நாடு கடந்த நிலையில் வாழும் முன் னாள் பிரதமர் தாக்ஸின் ஷினவட்ராவின் நெருங்கிய நண்பரான சாமக், 163க்கு 310 வாக் குகள் வித்தியாசத்தில் தனது நெருங்கிய போட்டி யாளரை தோற்கடித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் மக்கள் சக்தி கட்சியானது பெருமளவு வாக்கு களைப்பெற்றிருந்தது.2006 ஆம்ஆண்டு இரா ணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் அந்நாட்டில் தேர்தல்கள் நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும். எனினும் இத்தேர்தலில் மக்கள் சக்தி தேவையான பொரும்பான்மை யைப்பெறத்தவறியதையடுத்து ஏனைய 5 சிறிய கட்சிகளுடன் கூட்டிணைந்து கூட்டமைப்பாக தன்னை உருவகித்து க் கொண்டது.

பிரதமராக தெரிவு செய்யப்பட்ட சாமக்கின் நியமனத்திற்கான உத்தியோகபூர்வ அங்கீ காரத்தை ஒரு சில தினங்களில் மன்னர் பூமி போல் அதுலியாடேஜ் வழங்கவுள்ளார்.

பிரதமராக தெரிவு செய்யப்பட்டமை குறித்து சாமக் (72 வயசு) விபரிக்கையில். இதனை நான் கொண்டாடப்போவதில்லை. என்னுடைய வழமை யான வாழ்க்கை முறையையே நான் தொடரவுள்ளேன் என்று கூறினார்.



தற்போது எனது தோளில்பல மேலதிக பொறுப்புகள்சுமத் தப்பட்டுள்ளன. இது மகிழ்ச்சிகரமான ஒன்றல்ல என்ற போதும் நான் அவற்றை ஏற் றுக்கொள்ளவுள்ளேன் என அவர் மேலும் தெரி வித்தார்.

1960 களில் தனது அரசியல் வாழ்க் கையை ஆரம்பித் சாமக் பல தடவைகள் அமைச் சராக பணியாற்றியுள்ளார். அத்துடன் 1970 களில் அதி காரத்தைக் கைப்பற்றி இராணுவ அரசாங்கத் தில் உள்துறை அமைச்சராக பணியாற்றியுள் ளார். அத்துடன் பாங்கொக் ஆளுநராகவும் அவர் சேவையாற்றியுள்ளார். (அ-5)

## எகிப்து-காசா கம்பி வேலி

(ராஃபா)

கம்பி வேலியை அமைக்கும் பணியில் ஈ பட்டு இருப்பவர்கள் எகிப்து இராணுவ வீரர்கள்



எகிப்து மற்றும் காசா பகுதிக்கு இடையே ரஃபா நகரில்தான் இந்தக் காட்சி. கடந்த சில நாட் களுக்கு முன்பு இப்பகுதியில் தான் பாலஸ் தீன தீவிரவாதிகள் குண்டுவைத்து எல்லைச் சுவ ரைத் தகர்த்தனர்.

## உலக தரிசனம்

எல்லை பகுதியை மீண்டும் மூட எகிப்து இரா ணுவ வீரர்கள் முயற்சி செய்ததால் பாலஸ்தீனர் கள் எகிப்துக்குள் நுழைவது குறைந்தது. (5)

# 6 கிலோ எடை கொண்ட 16 வயதுப் பெண்

(காட்மாண்டு)

ஆறு கிலோ எடையும் 28 அங்குலம் உயர மும் உடைய உலகின் மிகக் குள்ளமான பெண் நேபாளத்தில் உள்ளார் என்று தெரியவந்துள் ளது.

நேபாளத்தின் மேற்கு பகுதியிலுள்ள நேபாள் கஞ்ச் என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு வர்த்தக நிகழ்ச்சியில், உலகின் மிக குள்ளமான மற்றும் மெல்லிய உடல்வாகு கொண்ட பெண், பார்வை யாளர்களை மிகவும் கவர்ந்தாள்.

இவளை காண்பதற்காக ஏராளமானோர் 20 ரூபாய் டிக்கெற் எடுத்து வரிசையில் காத்துக் கிடத்தனர். ஐஸ்வொரி மாயா சின்னல் என்ற இந்த பெண் 16 வயசு நிரம்பியவள். ஆனால் இவளது எடையோ வெறும் ஆறு கிலோ, உய ரமோ 28 அங்குலம். இவளது தந்தை தான் பகதூர் சின்னல் கூறுகையில்,

கடந்த 1991ஆம் ஆண்டு ஐஸ்வொரி பிறந்த போது, வெறும் 200 கிராம் எடை மட்டுமே இருந் தாள். உலகிலேயே எனது மகள்தான் மிக வும் குள்ளமான மற்றும் மெலிந்த உடல்வாகு கொண் டவள் என்றார். இந்நிகழ்ச்சியில், ஐஸ்வொரி மாயா சின்னல் கிராமிய பாடலுக்கு நடன மாடி யது அனைவரையும் வியக்க வைத்தது. இவ ளது நடனத்தைக் கண்டு அங்கு கூடியிருந் தவர்கள் பரிசுப் பொருட்களை வழங்கினர். இவளை காண்பதற்கு ஏராளமானோர் ஆவலுடன் வந்து சென்றனர். (அ-5)

# ...வாழ்த்துக்கள் – 30.01.2008



...ன்னத்தம்பி
...Dip.in Ed.
...M.Phil (Education)
...ர் - தரம் 1
...ப்பாணப் பல்கலைக்கழகம்

...வளர்ச்சியும்

...லை
...யாசாலை
...கொழும்புப் பல்கலைக்கழகம்
...மா, கல்வியியல்முதுதத்துவமாணி
...யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
..._தாரிகள் திணைக்களம். யாழ்ப்பாணக்
...1989)
...சுழிபுரம் விக்டோறியா கல்லூரி யாழ்ப்
...ாசகர் (1986- 1989)
...ல்வியியல் விரிவுரையாளர் (1990-1996)
... (1997- இன்றுவரை) கல்வியல் துறைத்
...ழப்புக்கள்
...க்கள்
...ந்த உயர்கல்வி நூலுக்கான பரிசு பெற்ற
...வி (2005)
...பாடசாலை முகாமைத்துவம் (2006)
...2005)
...லை களை முகாமைசெய்தல் (2005)
...ரும் புதியவளர்சியும்
...ஆராய்ச்சி நிதியுதவியுடன் மேற் கொள்
...ஆசிரியர்களின் பொருளாதார நிலைமை (1993)
...ம் யுனி செஃப்(UNICEF)இணை ஆய்வில்
...வந்த ஆய்வறிக்கை
... Education of Children inConflict
...03)
...மதிப்பீட்டுப் பணி மேற்கொள்ளும்
...கம்

## தேடலின் முதல்வன் வாழ்க!



எம் (எமது ) சின்னத்தம்பிக்கு மணி விழாவா ? அவருக்கு மணிவிழா எடுப்பதுபற்றி மன மகிழ்வடைவோரில்நானும் ஒருவன். நான்கு தசாப்த கால நண்பரும் வழிகாட்டியுமான திரு. மா. சின்னத்தம்பி அவர்கள் கற்றல் கற்பித்தலிலும் தேட லிலும்முதலிடம் வகிப்பவர். 1964 இல் யாழ். இந்துக்கல்லூரியில் கலைப்பிரிவில் தனது நா வன்மையால் அக்கால மாணவ மேடைகளிலும் விவாத அரங்குகளிலும் பேச்சுக்களில் தங்கத் தாரகைகளை தமதாக்கிக் கொண்ட இந்துவின் தங்கத் தலைமகன் இவர். எமது இந்து இளைஞன் (1967) சஞ்சிகையின் தமிழ்ப் பிரிவின் பத்திராதிபர். எச் செயற்பாடுகளிலும் தனக்குகென ஒரு பாணியை வகுத்துக் கொள்ளும் திராணியுடையவர். யாழ். இந்து தம்மை இருமுறை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியதாக பிரியாவிடையின் போது நெகிழ்ந்து பேசினார். இது அவரது கல்வி ஞான திரட்சிக்கு இந்து அன்னை கொடுத்த வரமாகும்.

இவர் படித்த கல்லூரிகளும் கொழும்பு பல்கலைக்கழகமும் நல்லியல் புகழையும் ஆளுமையையும் இவரிடம்வளர்த்தன.குருவும் தாரமும் இவரது விதியை விஸ்தரித்தன. கொழும்பு பல்கலைக்கழக அப்போதைய பீடாதிபதி பேராசிரியர் லால் பெரேராவையும், பேராசிரியர் சந்திரசேகரம்போன்றோரை இங்கு அழைத்து வெள்ளி விழாவில் கௌரவித்ததன் மூலம் பல்கலைக் கழகங்களிடையே பிணைப்பை ஏற்படுத்தும் வரலாற்று கைங்கரியத்தையும் திறமையாக செய்து முடித்தார். தம்மிடம் மாணவர்களாக வருபவர்களையும் நண்பர்களையும் மாண்புடையவராக்கி மகிழ்பவர் திரு.மா.சி.கடுமையான உழைப்பாளரான என் நட்புக்கும் பாசத்திற்குமுரிய இக்கல்வியாளன் இன்று போல் என்றும் சிறந்த பேராசானாக துலங்கிட இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

பொ. சிறீஸ்கந்தராசா
உப . அதிபர்,யாழ்.இந்துக்கல்லூரி.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதல்வரின் வாழ்த்துச் செய்தி




யாழ்ப்பாண கல்ஷியுலகில் நன்கு அறிமுக மானவர் உயர் . திரு. எம். சின்னத்தம்பி அவர்கள். யாழ். இந்துக் கல்லூரி பெற்ற புகழ்பூத்த மாணவர்களிலொருவராக பல்கலைக்கழகம் சென்று, தன் அயராத முயற்சியால் கல்வியில் உயர் நிலை பெற்றவர். பொருளியல் துறையில்புகழ்பூத்த ஆசிரியராக மாணவர்களால் மதிக்கப் பட்டவர். நிறைந்த ஞாபசக்தியோடு தன் கற்பித்தல் புலமையை வெளிப் படுத்துபவர். யாழ். பல்கலைக்கழக கல்வியியற் துறையை தன் ஆளுமையால் அலங்கரிக்கின்ற நல்லாசான். புதிய விடயங்களைத் தேடிக் கற்பதிலும்,கற்றவற்றை உடனுக்குடன் வெளிப்படுத்துவதிலும் இவருக்கு நிகர் இவரே. பொருளியல் துறைசார்ந்த நூல்களையும் கல்வித்துறைசார்ந்த கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டுப் பெருமை பெற்றவர்.

மணிவிழாக் காணும் நல்லாசான் என்றும் சிறப்புற்று விளங்க வாழ்த்தி வணங்குகிறேன்.

திரு. ஆ. ஸ்ரீஸ் கந்தமூர்த்தி
அதிபர் ,கோப்பாய் ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

## ஆசிரிய உலகுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு



யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலிருந்து திரு. மா. சின்னத்தம்பியை நான் நன்கறிவேன்.இவர் யாழ் இந்துவின் மைந்தர்களில் சிறப்பு மிக்கவர். திறமைமிக்க பொருளியல் ஆசி ரியராக அவர் தம் பெயரை நிறுவியிருந்தார். யாழ். குடாநாடு முழுவதிலும் க.பொ.த (உ/த) தில் பொருளியல் கற்கும் மாணவர் அவரை நன்கு அறிந்திருந்தனர்.

பொருளியலில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றதுடன் யாழ்பல்கலைக்கழக கல்வியியற்புலத்தில் விரிவுரையாளராக அவருடைய சிறப்பாற்றல் காரணமாகதெரிவு செய்யப்பட்டு தனது ஆற்றலை கல்வியியற் புலத்தில் தெரியப்படுத்தியதுடன் கல்வியில் முது தத்துவமாணிப் பட்டம் பெற்று உயர்ந்த மூத்த விரிவுரையாளராக உயர்த்தப்பட்டதுடன் கல்வியியற் புலத்தின் தலைவராகச் செயற்பட்டு பட்டப்பின் படிப்பு மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்காக தன்னை அர்ப்பணித்தவர். தன்னை பொருளியலோடு சேர்ந்த கல்வியில் ஆய்வாளனாக பத்திரிகைகளிலும் கருத்தரங்குகளிலும் வெளிப்படுத்துவது அவரது ஆற்றலின் சாட்சிகளாகும். அவருடையவிடா முயற்சியும், தேடலும் இளைய தலைமுறையினர்க்கு நல்ல முன்னுதாரணம் ஆகும்.

பட்டப்பின் படிப்பு மேற்கொள்ளும் ஆசிரியர்கள் அவருடைய பரந்த அறிவினால் மிகுந்த பயனடைந்து வருகிறார்கள் .நல்லாசான் மா. சின்னத்தம்பி நீடுழி வாழ்க !

த. காங்கேசபிள்ளை
அதிபர், பலாலி ஆசிரியகலாசாலை.

## உயர்க, வாழ்க!

நண்பர் மா.சின்னத்தம்பி மணி விழாக்காண்கிறார் என நம்ப முடியவில்லை. ஓர் இளைஞனுக்குரிய துடிதுடிப்புடனும் ஒரு மாணவனுக்குரிய தேடலுடனும் அவர் கல்வியற் புலத்தில் வள்ளய வருகிறார். காலங்காலமாக கிளிப்பிள்ளை பாடமாக ஒப்புவிக்கப்பட்டு வரும் தத்துவங்களில் மட்டும் தங்கியிராது புதிய சிந்தனைகள் மற்றும் தரிசனங்களை அறிமுகப்படுத்தும் இந்நல்லாசானை ஆசிரியர்கள் மொய்ப்பதில் வியப்பில்லை. எழுபதுகளில் குடாநாட்டின் முன்னணிப் பொருளியல் ஆசிரியராகத் தம்பெயரை நிறுவிய சின்னத்தம்பி பிறகு கல்வியியற் புலத்துக்குப் போய்ச்சேர்ந்தமை அவர் பணிக்குப் பிறிதொரு பரிமாணத் தைத்தந்தது. பொருளியலாளனுக்குரிய கூர்ந்த பார்வை அவரைக் கற்றோர் மத்தியில் அடையாளங்காட்டும்.

சின்னத்தம்பி குடுப்பத்தோடு எனக்குள்ள உறவு திருமதி சசிலேகா சின்னத்தம்பியின் பெற்றோர் காலத்திலிருந்து தொடர்வது. ஆசிரிய தம்பதியான அவர்களுக்கு ஐவரும் பெண்மக்கள். யாழ்பாண சமூகத்தில் அதற்கு ஒரு தனி அர்த்த முண்டு! ஆனால் அவர்கள் வாழ்க்கையை உற்சாகமாக எதிர்கொண்டு பிள்ளைகளை மேம்படுத்தினார்கள். திரு.சின்னத்தம்பியின் மூன்று பெண் பிள்ளைகளும் அவருடைய வழிகாட்டலில் கல்வியிற் சாதனை புரிந்து முன்னேறியுள்ளனர். "நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்" என்ற பாவேந்தர் வாக்குக்கு இலக்கியம் இவர்கள்.

நண்பர் சின்னத்தம்பி கலாநிதிப்பட்டம் பெற்று பேராசிரியராக உயர்ந்து நெடுநாள் வாழ்க என வாழ்த்துகிறேன்.

சோ.பத்மநாதன்
ஓய்வு பெற்ற அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை.

## அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி



யாழ். மண் ஈந்த அறிவுப் பேராசான் திரு.மா.சின்னத்தம்பி அவர்களது 60ஆவது அகவைக்கு ஆசிச்செய்தி வழங்குவதனையிட்டு மட் டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் யாழ்பாணக் கல்லூரியில் பொருளியல் விரிவுரையாளராக அடியெடுத்து வைத்து அதன் பின்னர் கல்லூரிகளில், கல்லூரியில் ஏறத்தாழ 16 வருடங்கள் ஆசிரிய சேவையை ஆற்றிக் கொண்டிருந்த அதே காலப் பகுதியில் கல்வியமைச்சின் கல்வித் திணைக்களத்தில் முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றினார். அத்துடன் 1986-1988 காலப்பகுதியில் சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகராகவும் 1986-1990 காலப்பகுதியில் இலங்கைக் கல்வித் திணைக்களத்தின் க.பொ.த.உயர்தர தேசிய பரீட்சையின் பொருளியல் பாடத்தின் மேலதிக பிரதம பரீட்சகராகவும் கடமையாற்றினார்.

இவற்றோடு மட்டும் நின்றுவிடாது தனது சீரிய பணியினை விரிவுபடுத்தும் பொருட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிட்டார். அவற்றுள் கல்வி முகாமைத்துவம் (முதுதத்துவமாணி-கல்வி),இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்தியும் அதன் பொருளாதாரத்தாக்கமும் ('முதுமாணி-பொருளியல்),யாழ்ப்பாணத்தில் பட்டதாரி ஆசிரியர்களது நிதியியல் தன்மை (யாழ்.பல்கலைக்கழகத்தால் மானியம் வழங்கப்பட்டது). யாழ். மாவட்டத்தின் க.பொ.த. உயர்தர மாணவர்களது பிரத்தியேக செலவுகள் (கலாநிதி நிகழ்ச்சித்திட்டத்திற்காக) என்பன குறிப்பிடத்தக்கன.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் - நிற்க அதற்குத் தக"

என்பது பொய்யாமொழிப் புலவர் வாக்கு அதற்கினங்கத் தனது துறையிலே துறைபோகக் கற்று தான் கற்ற கல்வியை ஏனையோரும் கற்றுப் பயன்பெறும் பொருட்டு பல நூல்களையும் தமிழ் மொழியிலே எழுதி வெளியிட்டார் அவற்றுள் கல்வித்துறையில் பொருளியல் கல்வி (2007), பாடசாலை முகாமைத்துவம் சமகாலத்தேவைகள்(2006), இலங்கையின் முகாமைத்துவக்கல்வி(2005), இலங்கையில் கல்விச் செலவினங்கள் (2005), ஆசிரிய முகாமைத்துவம் (2004), என்பன குறிப்பிடத்தக்கன.

மேலும் பொருளியல் துறையில் "1990 களில் பிராந்திய பொருளாதார கூட்டுறவுகளும் அபிவிருத்திகளும்" (1997), "அரச நிதி" (முதலாம் பதிப்பு-1978,இரண்டாம் பதிப்பு- 1990) "தேசிய வருமானம்" (முதலாம் பதிப்பு-1979),இரண்டாம் பதிப்பு-(2000),'வெளிநாட்டு வர்த்தகம்" (1988), "பணம்" (1987),வங்கியியல் (1987), "மீதிக் கொடுப்பனவு" (1988) ஆகிய நூல்களையும் எழுதினார்.

தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் -தரம் 1 ஆகக் கடமையாற்றும் திரு.மா.சின்னத்தம்பி அவர்கள் அனைவ ரோடும் எளிமையாகப் பழகும் பாங்கும் சகல மாணவர்களுக்கும் இலகு வாகப் புரியும் வண்ணம் பாடத்தைப் போதிக்கும் ஆற்றலும் அவரது சிறந்த பண்பைப் பிரதிப்பலிப்பதாக அமைகின்றது. இத்தகைய சிறந்த பண்புகள் ஒருங்கேயமைந்துள்ள திரு.மா. சின்னத்தம்பி அவர்கள் மென்மேலும் தனது பணியினைத் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன். வாழ்க. வளர்க.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
யாழ்.மாவட்டம்.

## மணிவிழா நாயகனுக்கு மனமுவந்த வாழ்த்துக்கள்

சீர் மலியும் வடஇலங்கை வண்ணார்பண்ணையில் அவதரித்த என் நண்பன் மா. சின்னத்தம்பி 30.1.2008 இல்தனது அறுபதாவது அகவையை அடைவதை நினைத்து பேருவகை அடைகின்றேன். 1966 ஆம்ஆண்டு நாம் இருவரும்யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரியில் இணைந்து கல்வி கற்கும் அரிய வாய்ப்பை பெற்று 1968 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாகத்தில் உயர்கல்வி கற்பதற்குத் தெரிவானோம்.

பல்கலைக் கழகத்தி லும் நாம் இருவருமே ஒரே துறையாக பொருளியல் துறையைத் தெரிவு செய்து அத்துறையில்சிறப்புப்பட்டம் பெற்றுக் கொண்டோம். என் நண்பன் அத்துறையில் B.Phil பட்டத்தையும் தனக்குரித்தாக்கினார்.

அதன்பின்னர் அவர் "அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலில் ஆங் கொரு ஏழைக்கு எழுத்தறிவித்தல்ஆயிரம்மடங்கு மேலாம்" எனும் முது மொழிக்கமைய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், இந்துக் கல்லூரியிலும்,விக்ரேரியாக்கல்லூரியிலும் யாழ்ப்பாண இந்துக்கல்லூரியிலும் தான் கற்ற கல்வியை விதைப்பதற்கான ஆசிரியப்பணியை மேற் கொண்டார். தனது கற்பித்தல் நிபுணத்துவத்தால் பிரசித்தி பெற்ற ஆசான் எனும் சிறப்புடன் பல தனியார் கல்லூரிகளிலும் கற்பித்தல் பணியை மேற்கொண்டார். பின்னர் யாழ்பல்கலைக் கழகத்தில் கல்வியியல்துறை விரிவுரையாளராக பதவி ஏற்று பணிபுரிந்து வருகின்றார்.

கற்பித்தலுடன் மட்டும் நின்று விடாது தான் கற்க வேண்டியவை பலவுள என உணர்ந்த அவர் பொருளியல் துறையில் முதுமாணிப்பட்டம்பெறுவதற்குமான முயற்சியிலும் வெற்றி கண்டார். அவரது ஆற்றலின் வெளிப்பாடாகயாழ். பல் கலைக்கழகத்தின் கல்வியியல் துறைத்தலைவர் எனும் பெரும் பதவியைப் பெற்று நாட்டின் எதிர் காலச் சிற்பிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு செயற்கரிய தனது பணியை சிறப்புடன் ஆற்றிவருகின்றார்.

அவர் இன்று அறுபதாவது அகவையை அடைந்து தனது வாழ்க்கைப் பயணத்தைத்தொடங்கவுள்ள வேளையில் அவர்தனது மூன்று பெண் பிள்ளைகளையும் மூன்று துறைகளில் விற்பன்னர்களாக்கியும் அகமகி ழும் இல்லாளுடன் இல்லற இன்பம் துய்த்தும் கல்வியில் மேலும் பல அரிய ஆராய்வுகளை மேற்கொண்டு தனது கல்வியியல் பட்டங்களை அணி கலன்களாக்கியும் 42 ஆண்டுகள் கடந்திட்ட எம் நட்பு தொடர்ந்திடவும் வேண்டுமென்று இறைவனது பாதக்கமலத்தை பரவி என் நண்பன் சிறப்புற்று வாழ ஆத்ம நண்பனின் வாழ்த்துக்களும் அவருக்கு என்றென்றும் உண்டு என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

க.சுந்தரேசன்
பிரதித்திட்டப்பணிப்பாளர் ,
வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம்,
வவுனியா மாவட்டம்.

அகவை அறுவதில் அகமகிழ்ந்திருக்கும் பேராசான் மதிப்புமிகு திரு. மா. சின்னத்தம்பி அவர்களது கல்விப் பணியினை கௌரவிக்குமுகமாக எதிர் வரும் 20.2.2008 அன்று அவருக்கு மணிவிழா எடுப்பதற்கு அவரது மாணவர்களும் நண்பர்களும், சமூக நலன் விரும்பிகளும் ஆர்வம் கொண்டுள்ள மையால் ஆர்வமுள்ளோர் எதிர்வரும் 3. 2. 2008 ஞாயிறு பி.ப 1.00 மணிக்கு யா/ கொக்குவில் இந்துக்கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

திரு . அ. அகிலதாஸ் அதிபர் யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
ஏற்பாட்டுக் குழுச்செயலாளர்.

தொ. இல: 021 222 2646, 021 4590 [illegible]

# ஹர்பஜன் சிங்கிற்கு விதிக்கப்பட்ட 3 டெஸ்ட் போட்டிகள் தடை நீக்கம்

## விசாரணையின் முடிவில் ஐ.சி.சி. அறிவிப்பு

(மெல்போர்ன்)

சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் 3 போட்டிகளில் விளையாட விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்



டுள்ளது. அவர் மீதான இன வெறிதாக்குதல் புகாரும் கைவிடப்பட்டுள்ளது. எனினும் அவர் தனது சம்பளத்தில் 50 சதவீதத்தை அபாரதமாக செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப் பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெற் அணியில் இடம்பெற்றுள்ள ஹர்பஜன் சிங், அவுஸ்திரேலிய வீரர் அன்ரூ சைமன்ஸை இன வெறியுடன் விமர்சித்ததாக புகார் எழுந்தது. இது குறித்து விசாரித்த போட்டி நடுவர் மைக் பிராக்டர் ,3 டெஸ்ட் போட்டிகளில் ஹர்பஜன் சிங் விளையாட தடை விதித்து உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து ஹர்பஜன் சிங் சார்பில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இம் மேல் முறையீட்டு மனு விசாரணை அடிலெய்டு நீதிமன்றத்தில் தொடங்கியது. நீதிமன்றத்திற்கு நேற்று காலை வந்த ஹர்பஜன் சிங் செய்தியாளர்களிடம் பேச மறுத்துவிட்டார்.

விசாரணையில் பங்கேற்பதற்காக இந்திய கிரிக்கெற் அணியின் துணை மேலாளர் ஸ்ரீதர், முன்னணி கிரிக்கெற் வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆகியோரும் சாட்சியமளிக்க நீதிமன்றம் சென்றனர். இந்த மேல் முறையீட்டுமனுவை விசாரிப்பதற்காக ஐ.சி.சி ஜோன் ஹான்சன் என்ற நீதிபதியை நியமித்துள்ளது.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய ஹான்சன், சிட்னி போட்டியின் போது ஸ்டம்ப்புகளில் வைக்கப்பட்டிருந்த மைக்ரோபோனில் பதிவானவை சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறியிருந்தார்.



ஆனால் இதற்கு இந்திய கிரிக்கெற் துடுப்பாட்டச் சபை கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. விசாரணை முடிந்த பின்னர் ஹர்பஜன் சிங் மீதான இனவெறி புகார் கைவிடப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

3 டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஹர்பஜன் சிங்கிற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் நீக்கப்பட்டுள்ளது. எனினும் ஹர்பஜன் சிங் இந்த போட்டிகளில் விளையாடுவதற்காக தனக்கு அளிக்கப்பட்ட ஊதியத்தில் 50 சதவீதத்தை அபராதமாக செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. முன்னதாக சச்சின் டெண்டுல்கரும், அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின் தலைவர் ரிக்கி பொன்டிங்கும் விசாரணை இடைவேளையின் போது நீதிபதியிடம் கடிதம் ஒன்றை கொடுத்தனர்.

அக் கடிதத்தில் ஹர்பஜன் சிங் கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டலாம் என்றும், இனவெறி தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்ட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர். விசாரணையின் போது இன வெறி தாக்குதலுக்கு உள்ளானதாக கூறப்படும் அவுஸ்திரேலிய வீரர் ஆன்ரூ சைமன்சும், ஹர்பஜன்சிங் என்ன கூறினார் என்று தனக்கு நினைவில் இல்லையென்று கூறியதாக தெரிகிறது. இதனிடையே ஹர்பஜன் சிங் மீதான புகார்கள் கைவிடப்பட்டதை இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை வரவேற்றுள்ளது. (5)

## முத்தரப்பு தொடரில் இந்திய அணி பங்கேற்கும்

(புதுடில்லி)

இந்திய வீரர் ஹர்பஜன்சிங் மீதான தடை நீக்கப்பட்டதோடு அவருக்கு குறைந்த பட்ச தண்டனையை ஐ.சி.சி. வழங்கியுள்ளது. இதனால் பி.சி.சி.ஐ., ஐ.சி.சி., இடையே சமரசம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து சனிக்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி பங்கேற்கும் என பி.சி.சி.ஐ., தலைவர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலிய அணிகள் இப்போட்டி களில் பங்கேற்கின்றன. இந்திய அணிக்கு எந்தவித பாதிப்பும் இன்றி பிரச்சினை முடிந்ததால் இந்திய வீரர்கள் முத்தரப்பு ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக இன்று மெல்போர்ன் செல்வார்கள் என சரத்பவார் தெரிவித்துள்ளார். (5)

## சௌரவ் கங்குலி நாடு திரும்பினார்

(அடிலெய்டு)

ஒருநாள் போட்டி அணியில் இடம் பெறாத முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி நேற்றுக்காலை அடிலெய்டிலிருந்து தாயகம் புறப்பட்டார்.

டெஸ்ட் அணியில் இடம்பெற்றிருந்த கங்குலி, ராகுல் டிராவிட் உள்ளிட்ட வீரர்கள் ஒருநாள் போட்டி அணிக்கு தேர்வு செய்யப்படவில்லை. டெஸ்ட் தொடர் நேற்று முன்தினம் முடிபடைந்தது. இந்நிலையில் கங்குலி நேற்று காலை அடிலெய்டிலிருந்து விமானத்தின் மூலம் இந்தியா புறப்பட்டார்.

அதேநேரத்தில் ஒருநாள் போட்டி அணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள காம்பீர் உள்ளிட்ட 7 வீரர்கள் நேற்று அடிலெய்டு சென்றடைந்தனர். (5)

## டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி இரண்டாமிடத்தில்

(துபாய்)

சர்வதேச டெஸ்ட் போட்டி தரவரிசையில் இந்திய அணி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் ஆரம்பமாவதற்கு முன்பாக இந்தியா தரவரிசையில் நான்காவது இடத்தில் இருந்தது. அவுஸ்திரேலிய முதல் இடத்திலும் தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களிலும் இருந்தன.

சமீபத்தில் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் தென்னாபிரிக்கா 2-1 என வெற்றி பெற்றது. எனினும் மேற்கிந்திய தீவுகள் தரவரிசை பட்டியலில் 8ஆவது இடத்தில் உள்ள அணி என்பதால் தென்னாபிரிக்கா குறைவான புள்ளிகளையே பெற்று, நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டது.

இலங்கை அணி இரண்டாவது இடத்தில் இருந்தது. எனினும் இந்தியா பேர்த் டெஸ்டில் வெற்றி பெற்றது. மற்றும் அடிலெய்டில் சமநிலையானதையடுத்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. தற்போது இந்தியா 111 புள்ளிகளோடு இரண்டாவது இடத்தில் உள்ளது. இலங்கை 109 புள்ளிகளோடு மூன்றாவது இடத்திலும் அவுஸ்திரேலியா 143 புள்ளிகளோடு முதலிடத்திலும் உள்ளது. (5)

## இந்தியா இரண்டாமிடத்துக்கு தகுதியான அணிதான்-பொன்டிங்

(அடிலெய்ட்)

இந்தியா இரண்டாம் இடத்திற்கு தகுதியான அணி என நிரூபித்துள்ளதாக அவுஸ்திரேலியா அணியின் தலைவர் பொன்டிங் மற்றும் கில்கிறிஸ்ட் புகழாரம் சூட்டியுள்ளனர்.



அவுஸ்திரேலியா சுற்றுப்பயணம் சென்றுள்ள இந்திய அணி 4 டெஸ்ட் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. இத் தொடரில் 2:1 என்ற முன்னிலையில் தொடரை தன்வசப்படுத்திக் கொண்டது. அவுஸ்திரேலியா. இது குறித்து அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் கூறுகையில், கடந்த ஒரு மாதமாக கடினமான போட்டி தந்த இத் தொடர் ரசிக்கும்படியாக அமைந்திருந்தது. இந்தியா நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்தி உலகின் இரண்டாவது சிறந்த அணி என்பதை நிரூபித்துள்ளது என்றார்.

இது பற்றி தனது கடைசி டெஸ்டில் ஆடிய கில்கிறிஸ்ட் கருத்து கூறியதாவது; இந்திய அணிக்கு தான் நம்பர் 2 இடம் 2005ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரின் போது இங்கிலாந்து அணி கடுமையான போட்டியை தந்து எங்களை வீழ்த்தியது. கும்ளே தலைமையிலான இந்திய அணி அதைவிட சிறந்த அணி என்றார். (5)

## ஆஸி.வீரர் ஷோன் தைட் கிறிக்கெற்றிலிருந்து ஓய்வு

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் தைட் கிறிக்கெற்றிலிருந்து ஓய்வுபெறுவதாக நேற்று அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் தைட் கடந்த இரண்டு ஆண்டுகளாக தோள்பட்டை காயம் காரணமாக கிறிக்கெற் போட்டிகளில் விளையாடாமல் இருந்தார். இந்திய-அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடரில் பேர்த் டெஸ்டில் இந்தியாவுக்கு எதிராக இவருடைய பந்துவீச்சு எடுபடவில்லை.



இதனால் இவர் அடிலெய்டில் நடந்த கடைசி மற்றும் 4ஆவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் இடம்பெறவில்லை. ஆனால் இந்தியா-அவுஸ்திரேலியா-இலங்கை இடையே நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் தொடருக்கான அணியில் இடம்பெற்றிருந்தார். தைட் இம் முடிபை உடனடியாக எடுக்கவில்லை. தனது தோள்பட்டை காயம் முற்றிலும் குணமடைவதற்காக கிறிக்கெற் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். (5)




## அடுத்த அணித்தலைவர் வீரேந்திர சேவாக் – ஸ்டீவ்வோ

(சிட்னி)

இந்திய அணியின் அடுத்த தலைவராக வீரேந்திர சேவாக் வரவேண்டும் என்று முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவ் வோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஸ்டீவ்வோ கூறியதாவது, அடிலெயிற் டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இன்னிங்சில் சேவாக் சிறப்பாக ஆடி சதம் அடித்த விதம் பாராட்டுக்குரியது.

சேவாக் எப்போதுமே அதிரடியாக ஆடக்கூடியவர். ஆனால் அடிலெயிற் டெஸ்ட்டில் இந்திய அணியின் நிலையை உணர்ந்து அவர் பொறுமையாக ஆடி சமநிலைக்கு வழிவகுத்தார்.

மேலும் மைதானத்திலும் அவர் மிகுந்த பக்குவத்தோடு நடந்துகொண்டார். அனில் கும்ளேவுக்கு வயதாகிவிட்டதால் விரைவில் அவருக்கு மாற்றாக ஒருவரை அணித் தலைவராக நியமிக்க வேண்டும். சேவாக் இதற்கு மிகவும் பொருத்தமானவர். இவ்வாறு ஸ்டீவ்வோ கூறியுள்ளார். (5)

# பாக்.சம்பள ஒப்பந்தத்தில் இருந்து சொஹைப் அக்தர் அதிரடி நீக்கம்

பாகிஸ்தான் கிரிக்கெற் சபையுட னான 2008 ஆம் ஆண்டுக்கான சம்பள ஒப்பந்தத்தில் இருந்து முன் னணி வீரர் சொஹைப் அக்தர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.



போதிய உடற் தகுதியின்மை மற்றும் அவரது கடந்த கால நடவடிக்கைகளை கருத்தில் கொண்டே இந்த முடிபு எடுக்கப் பட்ட தாக பாகிஸ்தான் கிரிக்கெற்சபை தலைவர் நஸீம் அஷ்ரப் தெரிவித் தார்.

இது தவிர பாகிஸ்தான் அணியில் கடந்த காலங்களில் நிரந்தர இடம் பிடித்திருந்த வேகப் பந்து வீச்சாளர் மொஹமட்சமி மற்றும் ஆரம்ப துடுப் பாட்ட வீரர் இம்ரான் நஸீர் ஆகியோ ரும் சம்பள ஒப்பந்தத்திலிருந்த நீக் கப்பட்டுள்ளனர். இதில் இந்திய சுற்றுப் பயணத்துக்கான பாகிஸ் தான் அணி யில் இடம்பிடித்திருந்த சமி 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வெறும் 4 விக்கெற் றுக்களை மாத்திரமே வீழ்த் தியமை குறிப்பிடத் தக்கது.

இதனிடையே சம்பள ஒப்பந்தத் தில் இருந்து நீக்கப்பட்ட அக்தர் பாகிஸ் தான் அணியில் இடம் பிடிப்பதிலும் சிக்கலை எதிர் கொண்டு வருகிறார். உடற் தகுதியை நிரூபித்ததன் பின்னரே அக்தருக்கு பாகிஸ்தான் அணி யில் இடம் கிடைக்கும் என அணியின் தேர்வுக்குழு நிபந்தனை விதித் துள்ளது.

இதேவேளை பாகிஸ்தான் அணி யின் மத்திய வரிசையில் நிரந்தர இடம் பிடித்துள்ள மிஸ்பா உல்ஹக்கிற்கு சம்பள ஒப்பந்தத்தில் ‘ஏ’ தர அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் அவர் பாகிஸ்தான் அணியின் இந்த ஆண்டுக்கான நிரந்தர உப தலை வராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற இருபது-20 உலகக்கிண்ணத்துக்கான பாகிஸ்தான் அணிக்கு நீண்ட இடைவேளைக்கு பின்னர் அழைக்கப் பட்ட 32 வயதான மிஸ்பா உல்ஹக் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டுவரு கின்றார்.

இந்த ஆண்டின் டிசம்பர் மாதம் வரை அமுலில் இருக்கும் இந்த சம்பள ஒப்பந்தத்தின் படி ‘ஏ’ தர நிலையி லுள்ள வீரர்களுக்கு 2 இலட் சத்து 50ஆயிரம் அமெரிக்க டொலர்களும் ‘பி’ தரத்தில் உள்ள வீரர்களுக்கு 1 இலட்சத்து 75 ஆயிரம் அமெரிக்க டொலர்களும் ‘சி’ தரத்தில் உள்ள வீரர் களும் 1 இலட்சம் அமெரிக்க டொலர் களும் ‘டி’ தரத்தில் உள்ள வீரர்க ளுக்கு 75ஆயிரம் அமெரிக்க டொலர்களும் சம்பளமாக வழங்கப் படவுள்ளது. இதுதவிர போட்டிக் கட்டணம் மற்றும் ஊக்குவிப்பு தொகைகளும் வீரர்களுக்கு வேறாக வழங்கப்படும் என்பது குறிப்பிடத் தக்கது.

சம்பள ஒப்பந்தத்தில் இடம்பிடித் துள்ள வீரர்களின் விபரம்,

**‘ஏ’ தர நிலை:** சொஹைப் மலிக் (தலைவர்), யுனிஸ்கான், மொஹ மட் யூசுப், மிஸ்பா உல் ஹக், மொஹமட் அசிவ்.

**‘பி’ தர நிலை:** கம்ரன் அக் மல், சல்மான் பட், உமல் குல், ஷஹீட் அப்ரிடி, சொஹைல் தன்வீர்.

**‘சி’ தர நிலை:** அப்துல் ரஹ்மான், யாசிர் அரபாத், ராவ் இப்திகார், அன் ஜும், டினேஷ் கனேரியா, பவாத் அலாம்.

**‘டி’ தரநிலை:** சப்ராஸ் அஹ மட், நசீர் ஜம்ஷத், அபாக் ரஹீம், குர்ராம் மன்ஸூர், நுவ்மானுள்ளா, சொஹைல் கான், சுல்பிகார் ஜான், வஹாப் ரியாஸ், ஷொஹைப் கான், சமீயுள் ளாகான். (5)

> கெட்ட செய்திகளுக்கு இறக்கைகள் உண்டு. நல்ல செய்திகளுக்கு கால்கள் கூடக் கிடையாது.
>
> -அப்துற்-றஹீம்

வலம்புரி

# புலிகளின் தலைவரைத் தேடும் தமிழகப் பொலிஸார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழ் நாட்டிற்கு வந்துவிட்டதாக தமிழகப் பத்திரிகைகள் கண்டபாட்டில் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த செய்தி வெளியிடுகையில் இந்துப் பத்திரிகைக்கும் கணிசமான வகிபங்குண்டு. ஏன்தான் இப்படிச் செய்தியை வெளியிட்டார்கள் என்பது புரியாத புதிராக இருந்தாலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமிழகத்திற்கு வந்துள்ளார் என்ற செய்தி காட்டுத்தீ போல இந்திய மாநிலங்களில் பரவுவதற்கு தமிழ் நாட்டுப் பொலிஸாரும் மூல காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

பிரபாகரன் பற்றிய தகவலை தமிழகப் பொலிஸாருக்கு வழங்கியது யார்? என்ற கேள்விக்கு முன்னதாக,இலங்கை விமானப்படை நடாத்திய குண்டு வீச்சில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தங்கியிருந்த எக்ஸ்ரே முகாம் சேதமடைந்த தான செய்தியை இலங்கை அரசு வேகமாகப் பரப்பியது.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு பரப்பிய மேற்படி செய்திக்கு முதலிடம் கொடுப்பதில் தமிழகத்து இலத்திரனியல் ஊடகங்கள் அதீத அக்கறை காட்டின. கலைஞர் தொலைக்காட்சியில் கூட அலேற் நியூஸ் (Alert News) ஆக பிரபாகரனின் முகாம் மீது இலங்கை விமானப்படை குண்டு வீசியதான செய்தி வெளியிடப்பட்டது.

உண்மை நிலையைக் கண்டறியாமல் தமிழக இலத்திரனியல் ஊடகங்கள் வெளியிட்ட செய்திக்கு கை, கால் பொருத்தி தமிழக அச்சு ஊடகங்கள் அழகுபடுத்திப் பார்த்தன. இதன் விளைவுதான் தமிழகப் பொலிஸார் சந்து பொந்துகளிலெல்லாம் தேடுதல் நடத்தக் காரணமாயிற்று.

சிகிச்சை ஒன்றிற்காக கோவையிலுள்ள மருத்துவமனை ஒன்றிற்கு பிரபாகரன் வந்திருந்தார் என்றும் அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் கூறி தமிழகப் பொலிஸார் தேடுதலைத் தீவிரப்படுத்தினர். அந்தத் தேடுதல் இன்றுவரை நின்றபாடில்லை.

பிரபாகரன் சிகிச்சை பெறுவதற்கு தமிழகம் வந்ததாகக் கூறப்பட்ட செய்தி திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதாகும். இவ்வாறாக தகவலை பரப்புவதனூடாக இலங்கை -இந்திய கடலோரத்தில் பாதுகாப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்துவது,தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளை சோதனையிடுவது, தமிழகத்திற்கு எதிர்வரும் காலங்களில் அகதிகளாகச் செல்பவர்களை கட்டுப்படுத்துவது ஆகிய பல் நோக்கங்களைக் கொண்டே மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளதென்பது உறுதியாகின்றது.

எதுவாயினும், பிரபாகரன் தமிழகத்திற்கு வந்தார் என்ற தகவலை தமிழகப் பொலிஸார் எடுத்த எடுப்பில் நம்பி தேடுதல் நடத்தியமை அவர்களின் திறமைக்கு பங்கமாயிற்று. அதுமட்டுமன்றி தமிழகப் பொலிஸாரே முதற் தர ஏமாளிகள் என்ற பெயரும் அவர்களுக்கு சொந்தமாகிவிட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பை ஓர் சாதாரண அமைப்பாக கருதவில்லை என்பதை தமிழகப் பொலிஸாரின் தேடுதல் நடவடிக்கை உறுதி செய்திருந்தாலும், திட்டமிட்டு வெளிப்படுத்தப்பட்ட வதந்திக்கு தமிழகப் பொலிஸார் கூடிய முக்கியத்துவம் கொடுத்து தமிழகத்தின் ஒற்றுமைப்பாட்டையும், சகோதரத்துவத்தையும் இழிமைப்படுத்திவிட்டனர் என்ற குற்றச்சாட்டு காலத்தின் வரலாறாகிவிட்டது.

# 20 வருடங்களாக இடம்பெற்ற அழிவுகளுக்காக ஜனாதிபதி மக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்

## ஐ.தே.க.செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

இந்திய -இலங்கை உடன்படிக்கையினால் உருவான 13ஆவது திருத்தத்தை முன்னெடுத்து 1987 ஆம் ஆண்டிலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வினை கண்டிருக்கலாம். ஆனால் நாட்டை களேபரமாக்கி அதனை தடுத்து நிறுத்துவதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பங்களிப்பு உண்டு . எனவே கடந்த 20 வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற அழிவுகளுக்கு ஜனாதிபதி மஹிந்த மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்று ஐ.தே.க வின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தேசிய இனப்பிரச்சினைக்க தடிமன் பிடித்திருந்த போதே 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இன்று அது நிமோனியா காய்ச்சலாக வளர்ச்சி பெற்றுள்ள நிலையில் தடிமனுக்கான மருந்தே அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ளது. இது எந்தளவுக்கு சாத்திமாகும் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையிலேயே திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

1987இல் மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன இந்தியாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு அரசியலமைப்பில் 13ஆவது திருத் தத்தை மேற்கொண்டு மாகாண சபை முறையை உருவாக்கினார்.

அத்தோடு இந்திய அமைதி காக்கும் படையினரும் இலங்கைக்கு வந்தனர். இவ்வாறான சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் மேற்கண்ட தீர்வு க்கு இணங்கச் செய்து அன்றே பிரச்சினைக்கு தீர்வினை கண்டிருக்கலாம்.

அவ்வாறு இடம்பெற்றிருந்தால் இரு பது வருட காலம் அழிவுகளை சந்தித்திருக்கமாட்டோம். பொதுமக்கள் படையினர் என பலர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் அவயவங்களை இழந்துள்ளனர். பொருளாதாரம் சீர்குலைந்து இன்றைய துர்பாக்கிய நிலைக்கு அன்று 13 ஆவது திருத்தத்தை முன்னெடுப்பதற்கு முட்டுக்கட்டை போட்டதே காரணமாகும்.

1987இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு எதிரான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அணியில் இன்றைய ஜனாதிபதியும் முன்னணி வகித்தார்.

மறுபுறம் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஜே.வி.பி. யினர் எதிர்ப்புக்களை முன்னெடுத்தது. மட்டுமல்லாது பொது சொத்துக்களை தீயிட்டுக்கொளுத்தினர். பலர் கொல்லப்பட்டனர். விஜயகுமாரதுங்க உட்பட புத்திஜீவிகள் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களென 6600 பேர் கொல்லப்பட்டனர். அடிப்படைவாதம் இந்திய எதிர்ப்பு தலை தூக்கியாடியது.

இந்திய அமைதிப் படையினரால் பயங்கரவாதம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எமது தாய் நாட்டிற்காக 1600 இந்தியபடையினர் உயிர் அர்ப்பணிப்புச் செய்தனர்.

ஆனால் சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இந்திய படையினரை வானரப் படையென வர்ணித்ததோடு நாட்டை விட்டுவெளியேற வேண்டுமென்றும் எதிர்ப்புக்களை நடத்தி வெளியேற்றியது.

அதன் பின்னர் யுத்தம் பூதாகரமாக வெடித்து இன்றைய அவல நிலை தோன்றியுள்ளது. ஆனால் இருபது வருடங்கள் கடந்து அன்று எதிர்த்த 13ஆவது திருத்தச் சட்டம் முன்னெடுக்கப்படவேண்டுமென்று ஞானம் ஜனாதிபதிக்கு பிறந்துள்ளது. அத்தோடு இலங்கையில் உயிர்நீத்த இந்தியப்படையினருக்கு நினைவுத்தூபி அமைக்கும் அளவுக்கு தெளிவு பிறந்துள்ளது. இதனைத் தான் விதியின் விளையாட்டென்பது. எதிர்த்ததை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலை தலைதூக்கியுள்ளது. அன்று 1987 இல் 13ஆவது திருத்தச் சட்டத்தை முன்னெடுப்பதற்காக உயிர்நீத்த படையினர் பொதுமக்களுக்கு நஷ்டஈடு வழங்கி அன்று இடம்பெற்ற சம்பவங்களுக்கு நாட்டு மக்களிடம் ஜனாதிபதி மன்னிப்பு கோர வேண்டும்.

13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று சிலர் ஐ.தே.கவிடம் கேட்கின்றனர். நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அரசியலமைப்பில் அது சட்டமாக்கப்பட்டுள்ளது.

தேசிய பிரச்சினைக்கு தடிமன் பிடித்திருந்த போதே 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இன்று அது நிமோனியாக் காய்ச்சலாக வளர்ச்சி பெற்றுள்ள நிலையில் தடிமனுக்கான மருந்து வழங்கப்படவுள்ளது. இது எந்தளவிற்கு சாத்தியமாகும் என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும் .

இதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பாகும்.

### நாடு சர்வாதிகாரப் பாதையில்

ஜனாதிபதியும் சகோதரக் கம்பனியும் இணைந்து மெதுமெதுவாக நாட்டில் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த முனைகின்றனர்.

அதன் வெளிப்பாடே பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்தாகும்.

ஜனாதிபதியின் பாதுகாப்பு செயலாளராக அவரது சகோதரரே இருக்கவேண்டுமென அரசியலமைப்பில் திருத்தம் கெண்டு வரப்படவேண்டுமென்ற பாதுகாப்பு செயலாளரின் கருத்து எதிர்காலத்தின் சர்வாதிகார ஆட்சிக்கான அறிமுகமாகும்.

இந்த நிலை தொடருமானால் படைத்தள பதிகள் ஏன் பிரதம நீதியரசரும் ஜனாதிபதியின் சகோதரர்களாக இருக்க வேண்டுமென்ற சட்டத்தை கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

(அ-5)

# கச்சதீவில் தமிழக மீனவர்களுக்கு உள்ள உரிமைகள் பெற்றுத்தரப்படும்

## அமைச்சர் ஆற்காடு வீராசாமி தெரிவிப்பு

(சென்னை)

தமிழக சட்டசபையில் தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது. கேள்வி நேரம் முடிந்ததும் அ.தி. மு.க. காங்கிரஸ், பா.ம.க., மார்க்சிஸ்டு கம்பனிஸ்டு, இந்திய கம்னிஸ்டு, ம.தி. மு.க, விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் சார்பில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பாதிக்கப் படுவது குறித்து சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்து சிறையில் அடைப்பது, படகுகளை பறிமுதல் செய்வது போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து இங்கு உறுப்பினர்கள் பேசினார்கள். இதற்கும் பதிலளித்து பேசிய அமைச்சர் ஆற்காடு வீராசாமி கூறியதாவது, முதலமைச்சர் சமீபத்தில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்க தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறார். மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். விரைவில் அந்த மீனவர்கள் மீட்கப்படுவார்கள்.

தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் போது அவர்களையும் அறியாமல் இந்தியகடல் பகுதியை தாண்டி இலங்கை பகுதிக்கு சென்று விடுகிறார்கள். இதனால்தான் இது போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

கடந்த 21 ஆம் திகதி ராமேஸ்வரத்தில் இருந்து 3 விசைப்படகில் மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையை கடந்து விட்தாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்கள் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இது குறித்து இலங்கை தூதரகத்துக்கு தமிழக அரசு தெரிவித்து மீனவர்களை உடனடியாக திருப்பி அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர் கருணாநிதி, மத்திய இணைமந்திரி அகமதுவுடன் தொடர்பு கொண்டு மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். நானும் 3 முறை தொடர்பு கொண்டு பேசி இருக்கிறேன் அவர் 2 நாள் விடுமுறை என்பதால் இலங்கை அதிகாரிகளை உடனடியாக தொடர்பு கொள்ள முடியவில்லை. இன்று இலங்கை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசுகிறார்.

துரித நடவடிக்கையாக மத்திய அரசு மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளது. விரைவில் அவர்கள் மீட்கப்படுவார்கள். கச்சதீவு ஒப்பந்தப்படி தமிழக மீனவர்கள் அந்த பகுதியில் மீன்பிடிப்பது, வலைகளை காயப்போடுவது போன்ற பல்வேறு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவை மதிக்கப்படவில்லை மீறப்படுகின்றன என்று இங்கே பேசிய உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே ஒப்பந்தப்படி கச்சதீவு பகுதியில் தமிழக மீனவர்களுக்கு உள்ள உரிமையை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் உரிமையை மீட்டுத்தரும்படி மத்திய அரசிடம் வற்புறுத்தி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு ஆற்காடு வீராசாமி பேசினார்.

(அ-5)

# பதினைந்தாவது சார்க் உச்சி மாநாட்டை கண்டியில் நடத்த ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

பதினைந்தாவது சார்க் உச்சி மாநாட்டை எதிர்வரும் ஜூலை மாதம் கண்டியில் நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதிச் செயலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த உச்சி மாநாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கண்டி ஜனாதிபதி இல்லத்தில் நடை பெற்றது.

கண்டியில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டை முன்னிட்டு கண்டி நகர் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதிஇங்கு வலியுறுத்தினார். அதற்காக மேற்கொள்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான வழிகாட்டல்களையும் உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி வழங்கினார். இலங்கையில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டில் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் சுமார் ஆயிரம் பிரதிநிதிகளும் 300 ஊடகவியலாளர்களும் பங்கு கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-5)

# பொது இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 75 சைக்கிள்கள் வரை திருடியுள்ளோம்

## திருட்டுச் சந்தேக நபர்கள் வாக்குமூலம்

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சைக்கிள் திருடர்கள் நால்வரில் இருவர் தமது திருட்டை மல்லாகம் நீதிமன்றில் ஒப்புக் கொண்டதுடன் தாம் இதுவரை 75 சைக்கிள்கள் திருடியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூன்றாவது நபர் தரகர் என்றும், கைது செய்யப்பட்ட பெண் திருடப்பட்ட சைக்கிள்களை குறைந்த விலையில் வாங்கி விற்பனை செய்பவர் என்றும் நீதிமன்றில் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தம்மால் பொது இடங்களில்நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சைக்கிள்களை திருடி குடாநாடு பூராகவும் விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சாட்சிகளை விசாரணை செய்த மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் நால்வரையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச-5)

# மன்னார் தாக்குதலுடன் தொடர்பில்லை இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மன்னார் தட்சணா மருதமடுப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரே நடத்தியதாக விடுதலைப் புலிகள் கூறிய குற்றச்சாட்டை மறுப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இத்தாக்குதல் தமது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில் மேற்கொள்ளப்பட்டதாகவும் பாடசாலை மாணவர்களையும் பொதுமக்களையும் கொல்லவேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எமது ஆழ ஊடுருவும் அணியினர் அப்பகுதியில் செயற்படவேண்டிய அவசியம் இல்லை என்றும் மன்னார், வவுனியா முன்னரங்கப் பகுதிகளில் நேற்று 12க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளைக் கொன்றதாகவும் பொது மக்களை கொல்லவேண்டிய அவசியம் இல்லை என்றும் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். (ச-2)

## வேம்படி மகளிர் கல்லூரி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் தூய்மையான சிறந்த சூழல் கொண்ட பாடசாலையை தெரிவு செய்யும் போட்டியில் முதலாமிடத்தை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பெற்றுள்ளது.

இரண்டாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மூன்றாமிடத்தை யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையும் பெற்றுக் கொண்டதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவித்துள்ளது.

இதேவேளை தூய்மையான சிறந்த சூழல் கொண்ட பாடசாலையை தெரிவு செய்யும் போட்டியில் ஆரம்பப் பாடசாலையான யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## யாழ்.விமான...

வில்லை.

இதேவேளை மீண்டும் சிவில் விமான சேவைகள் வழமைக்குத் திரும்பியதாகக் கொழும்பு - யாழ்.விமான சேவையை நடத்தும் ஏறோ லங்கா, எக்ஸ்போ ஏயர் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏறோ லங்காவுக்குச் சொந்தமான முதலாவது பயணிகள் விமானம் நேற்றுக் காலை 9.20 மணிக்கும் மற்றொரு விமானம் 10.20 மணிக்கும் பயணிகளுடன் பலாலிக்குச் சென்று அங்கிருந்து நண்பகல் வேளையில் இரத்மலானை நோக்கித் திரும்பியுள்ளதாக அந்நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேநேரம் எக்போ ஏயரின் விமானங்களும் வழமைபோன்று மூன்று சேவைகளை பலாலிக்கு மேற்கொண்டதாக அந் நிறுவனக் குழுமப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஏ)

# அவுஸ்திரேலியப் பிரஜாவுரிமைக்கான தடைகளைக் குறைக்கத் திட்டம்

அவுஸ்திரேலியப் பிரஜாவுரிமை பெற விரும்பும் வெளிநாட்டுக் குடியேற்றவாசிகளுக்கான தடைகளைக் குறைக்கும் வகையில் பிரஜாவுரிமைப் பரீட்சை தொடர்பில் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ள உத்தரவிட கெவின் றூத்தின் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முன்னாள் பிரதமர் ஜோன் ஹாவார்ட்டினால் அறிமுகப்படுத்தப்பட்ட இத் தகுதிகாண் பரீட்சையில் பல கேள்விகள் முன்னைய அரசாங்கத்தைப் பிரதிபலிப்பவையாகவுள்ளதாகக் குடிவரவு அமைச்சர் கிறிஸ் இவான்ஸ் தெரிவித்தார்.

நாட்டில் பிரஜாவுரிமை பெறுபவர்களுக்கு முக்கிய பரீட்சையாகவுள்ளது. இந் நிலையில் இப் பரீட்சை தொடர்பில் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள நாம் விரும்புகின்றோம்.

இதன் பிரகாரம் அவுஸ்திரேலிய பிரஜைகளாக வர விரும்பும் மக்களுக்குள்ள அநாவசிய தடைகளை நீக்கும் வகையில் சரியான கேள்விகள் கேட்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது என்றும் கூறினார்.

கேட்கப்படும் கேள்விகளில் சில சரியாக இல்லாததன் காரணமாகவே இம் மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சிவில் விமான மையம் மீண்டும் பழைய இடத்தில்

சிவில் பயணிகள் விமானப் போக்குவரத்து மையம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கவுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

கட்டுவன் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த சிவில் விமானப் பயணிகள் போக்குவரத்து மையம் கடந்த காலங்களில் பெய்த கடும் மழை காரணமாக மக்களிற்கு ஏற்பட்ட அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாக யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்தில் இயக்கப்பட்டு வந்தது.

பொது மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு மேற்படி நிலையம் புனரமைக்கப்பட்டு நாளை தொடக்கம் மீண்டும் கட்டுவன் பிர தேசத்தில் திறக்கப்படவுள்ளது.

மீண்டும் பழைய இடத்திலேயே சிவில் விமானப் பயணிகள் போக்குவரத்து மையத்தை அமைத்து பொதுமக்களிற்கு விரைவான வசதிகளுடன் கூடிய சேவையை வழங்குவதே பாதுகாப்புப் படையினரின் நோக்கமாகும் என பலாலி பாதுகாப்பு படைகளின் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஏ)

## இடைக்கால...

கூறியதாவது,

மேற்படி இடைக்கால அறிக்கை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரம் பெறப்படும். அதன் பின்னர் அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அந்த உபகுழு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அமைச்சரவைக்கு ஆலோசனைகளை வழங்கும். அந்த ஆலோசனைகளின் அடிப்படையில் ஏற்பாடுகள் இடம்பெறும் எனத் தெரிவித்துள்ளார். (ஏ)

## புலிகளுக்கு ஆதரவாகப்...

முதலமைச்சர் கருணாநிதி கூறியதாவது,

காங்கிரஸ் உறுப்பினர்களின் உணர்வுகளை நான் அறியாதவன் அல்ல. ஏறத்தாழ ஒரு வார காலமாகச் சென்னையிலும் மற்ற இடங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை அரசு அனுமதிப்பதாகக் கருத்தில் கொண்டு அரசு மீது காங்கிரஸ் தலைவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

திருமாவளவனாக இருந்தாலும் வேறு யாராகவிருந்தாலும் புலிகளை ஆதரித்துப் பேசுவதைச் சட்ட ரீதியாகச் சந்திக்க வேண்டும். இதில் வேறு வழியில்லை. பொடாச் சட்டம் சரியாகப் பயன்படுத்தப்பட்டதா? இல்லையா? என்ற பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாகப் பேசப்படும் பேச்சு குற்றமாகாது என்று கூறப்பட்டுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதற்காக ஞானசேகரத்தை எடுத்துக் காட்டியிருப்பதற்கு ஏற்ப புலிகள் இயக்கத்தை ஆதரித்து பேச நான் ஆதரவு தருவதாக கருதக் கூடாது. அரசு நடத்தும் எங்களுக்குத் தர்ம சங்கடங்கள் இருப்பதைச் சொல்ல வேண்டிய நிலையில் நான் இருக்கின்றேன்.

அந்த அவையில் முன்பு ம.தி.மு.க. பற்றி பிரச்சினை எழுப்பப்பட்ட போது என் கருத்தைத் தெளிவாகக் கூறியிருக்கின்றேன். ராஜீவ் காந்தி கொலைக்கு முன்பு - பின்பு என்று இந்தப் பிரச்சினையை இரு பிரிவாக பிரித்துத் தான் அணுக வேண்டும் என்று நான் முன்பே சொன்ன கருத்தில் எந்த மாற்றமும் இல்லை. நான் அந்தக் கருத்தில் உறுதியாகவுள்ளேன் என்றார். (ச-5)

## ஆழ்ந்த...

உறவினர்கள் மிகுந்த சோகத்துடன் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கு உள்ளாகிய பஸ் வண்டி பாதையை விட்டு விலகி மரம் ஒன்றில் மோதி நின்றதாக காயம் அடைந்தவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-2)

## உயர் மட்டக் குழுவின்...

புலிகள் தெரிந்து கொண்டதன் பின்னரா தாக்குதல்களை நடத்தினர்? அல்லது பிரியாவிடை வைபவத்தை சீர்குலைக்கும் நோக்கில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதா? என்பது தொடர்பாகப் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பலாலி விமானப் படைத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் நீண்ட நாள்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் காலை அதுவும் கொழும்பிலிருந்து சென்ற விமானம் தரையிறங்குவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டமையினால் பாதுகாப்பு உயர் மட்டக் குழுவின் பலாலி விஜயத்தைப் புலிகள் ஏற்கனவே அறிந்து வைத்திருந்தனர் என்ற சந்தேகம் பாதுகாப்பு உயர் மட்டத் தரப்பில் வலுப் பெற்றதையடுத்தே விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, கூட்டுப் படைகளின் தளபதி டொனால் பெரேரா தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் பயணம்செய்த விமானம் பலாலி விமானப் படைத் தளத்தில் இறங்க இருந்த வேளையிலேயே இத் திடீர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்துப் பாதுகாப்பு உயர் மட்டக் குழுவினர் தங்களது பயணத்தை இரத்துச் செய்து விமானத்தைத் தரையிறக்காது திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## மன்னாரில் கிளைமோர்த்...

இடம் பெயர்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் சின்னப்பண்டிவிரிச்சான் அ.த.க. வித்தியாலய பாடசாலை மாணவர்கள், அதிபர் மற்றும் இரு ஆசிரியர்களே இத்தாக்குதலில் பலியாகியுள்ளனர். ஆழஊடுருவும் அணியினரின் கிளைமோர் தாக்குதலிலேயே பஸ் சிக்கியதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளைமோர்த் தாக்குதலில் சிக்கிய பஸ் பெரும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக பள்ளமடு வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டதுடன் பலியானவர்கள் 17 பேரினது சடலங்களும் பள்ளமடு வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

பயணிகள் பஸ்ஸில் பாடசாலை மாணவர்களே அதிகமாக பயணம் செய்ததாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலில் காயமடைந்த பலரது நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாகவும் இவர்களை கிளிநெச்சி வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பள்ளமடு மருத்துவமனை வைத்திய அதிகாரி வெற்றிமாறன் நேற்று மாலை தெரிவித்துள்ளார்.

பள்ளமடு வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட சடலங்கள் 11 மாணவர்களினுடையது என்றும் 6 சடலங்கள் சாதாரண பொதுமக்களினுடையது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் சிலருக்கு இரண்டு கண்களிலும் காயம் ஏற்பட்டுள்ளது. சிலரது அவயவங்கள் பெரும் சேதமடைந்துள்ளன. படுகாயம் அடைந்த பலர் அதிர்ச்சியில் உறைந்துபோயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தட்சணாமருதமடுவிலிருந்து மாணவர்களை ஏற்றிவந்த மேற்படி பஸ் வண்டி மடுத் தேவாலயத்திற்கு ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் இவ் அனர்த்தத்திற்குள் சிக்கியதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

**வைத்தியம்**

நாட்பட்ட, கைவிடப்பட்ட நோய்களுக்கும், மூட்டு வாத நோய்களுக்கும் விசேட சிகிச்சைகள் அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

(84) 077 4452545

**மாணவச் செல்வங்களே பொறுத்திருங்கள்**

வெகு விரைவில் நாவலர் வீதியிலும் நாங்கள்

(C-7498)

**முக்கிய அறிவித்தல்**

**கிருஷ்ணா அடகு கடை**

**370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

T.P. 222 5046 பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு (2006.12.31) முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத அடகு நகைகள் யாவற்றையும் 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு (2008.02.28) முன்பு வட்டியைச் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளவும்.

தவறின் 28 ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2008 ஆம் ஆண்டு (28.02.2008) அன்று விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

370, K.K.S. Road, Jaffna.

A.S.சுரேந்திரன்
உரிமையாளர்

(C-738)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.